பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆவணி 22, வியாழக்கிழமை 07.09.2017 | கதிர் 305

## செம்மணியில் கிருஷாந்தி நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம் செம்மணியில் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியின் 21 ஆவது ஆண்டு

பக்கம் 18 »

# இடைக்கால அறிக்கை 21 இல் வெளியாகும்

## அரசமைப்புப் பேரவையாக நாடாளுமன்று அன்று கூடும்

கொழும்பு, செப்ரெம்பர் 07

**புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக இதுவரை செயற்பட்ட அரசமைப்புப் பேரவையின் வழிகாட்டல் குழு, சுமார் எழுபதுக்கும் அதிகமான தடவைகள் கூடித் தயாரித்த இடைக்கால அறிக்கை, நீண்ட இழுபறிக்குப் பின்னர் முழு அளவில் இறுதி செய்யப்பட்டு, குழுவின் கூட்டத்தில் நேற்று அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.**

**எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடும்போது அங்கு உறுப்பினர்கள் அனைவருக்கும் அது சமர்ப்பிக்கப்படும்.**

பக்கம் 18 »

## 20 ஆவது திருத்தம் குறித்து உயர் நீதிமன்று விசாரணை

கொழும்பு, செப். 07

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக 14 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அவை தொடர்பான விசாரணையை உயர் நீதிமன்றம் நேற்று ஆரம்பித்தது.

நேற்றும், இன்றும், நாளையும் இந்த மனுக்கள் மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் நடத்தும் என ஏற்கனவே அறி விக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இந்த விசாரணகளின்

பக்கம் 18 »

## மீண்டும் அதிகாரத்துக்கா? மஹிந்தரின் பகல் கனவு அது!

### சரத் பொன்சேகா கருத்து

கொழும்பு, செப். 07

மீண்டும் ஆட்சிக்கு வரலாம் என மஹிந்த ராஜபக்ஷ பகல் கனவு காண்கின்றார் எனக் கூறுகின்றார் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது "மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவாரா?" – என்று அவரிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

அதற்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு

பக்கம் 18 »

### இன்று இறுதித் தீர்மானம்

## கிழக்கு மாகாண சபையில் கூட்டமைப்பு இருபதாவது திருத்தத்தை ஆதரிக்கும்!

கொழும்பு, செப். 07

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம் குறித்து மாகாண சபை இன்று கூடி ஆராயவுள்ள நிலையில் –

அந்தத் திருத்தத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எடுப்பதற்கான சாத்தியமே அதிகம் காணப்படுவதாகத் தெரிய வருகின்றது.

மேற்படி இருபதாவது திருத்தத்தில் பல மாற்றங்கள் இறுதி நேரத்தில் செய்யப்பட்டுள்ளன.

அவை குறித்து நேற்று உயர் நீதிமன்றத்தில் இவ் விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் விளக்கமளித்திருந்தார்.

இந்தத் திருத்தங்கள்

பக்கம் 18 »

## வெளிநாட்டு விசாரணையையே ஜனாதிபதி எதிர்க்கின்றார் என பொன்சேகா விளக்கம்

### ஜகத் ஜயசூரிய போல 30 குற்றவாளிகள் உள்ளனராம்

கொழும்பு, செப். 07

இராணுவத்தினர் மீது வெளிநாட்டவர்கள் கை வைப்பதை அனுமதிக்க போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

எனினும், குற்றமிழைத்த படையினர் மீது உள்ளக விசாரணைகள் நடைபெறும்போது அதனை நிறுத்துவதாக ஜனாதிபதி கூறவில்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவ்வாறு குற்றமிழைத்தவர்களில் ஜகத் ஜயசூரிய உள்ளிட்ட 30 பேர் உள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 18 »

## வடக்கு மாகாண சபையில் கூட்டமைப்பின் தீர்மானம் குறித்து இன்னும் முடிவு இல்லை

யாழ்ப்பாணம், செப். 07

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம் குறித்துத் தனது நிலைப்பாட்டைத் தீர்மானித்து அறிவிப்பதற்காக வடக்கு மாகாண சபை இன்று கூடுகின்றது.

எனினும், வடக்கு மாகாணசபையின் ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இது தொடர்பில் என்ன நிலைப்பாடு எடுக்கப்படவேண்டும் என்பது சம்பந்தமாகத் தெளிவான அறிவுறுத்தலோ, வழிகாட்டலோ கூட்டமைப்பின் தலைமையினால் நேற்றிரவுவரை விடுக்கப்படவில்லை என அறிய வந்தது.

இந்தக் குழப்ப சூழலில்

பக்கம் 18 »

## பிரிவினையைப் பலப்படுத்தவே புதிய அரசமைப்பு உருவாக்கம்!

### இப்படி விளக்குகின்றார் மஹிந்தர்




கொழும்பு, செப். 07

புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான அவசியம் ஏதும் இப்போது ஏற்பட வில்லை. நாட்டைச் சீரழிக்கவும் பிரிவினைவாதத் தரப்பை பலப் படுத்தவுமே புதிய அரச அமைப்பு உருவாக்கப்படுவதாக முன்னாள்

பக்கம் 18 »

### அளப்பு அருணாசலம்



பகல் கனவு நனவாகும் எண்டு நம்புறதுதானே அரசியல்...!

### முதல்வருக்கு எதிரான வழக்கு இன்று மன்றில்!

## நீதிமன்ற உத்தரவு எப்படி வரினும் மகிழ்ச்சியே என்கிறார் டெனீஸ்



யாழ்ப்பாணம், செப். 07

தம்மை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமை தவறு எனத் தெரிவித்து வடக்கு மாகாண அமைச்சராகவிருந்த பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் வழக்கு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கையில் –

நீதிமன்றத்தின் முடிவு எப்படி வரினும் தமக்கு அது இரட்டிப்பு மகிழ்ச்சியே என டெனீஸ்வரன் நேற்று 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

பக்கம் 18 »

### மத்திய வங்கி பிணை முறி விடயம்:

## உள்ளக அந்தரங்கத் தகவல்கள் அலோஸியஸுக்கு அத்துப்படி!

கொழும்பு, செப்.07

பிணை முறி ஏலம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் மிக முக்கியமான உள்வீட்டுத் தகவல்கள் அர்ஜுன் அலோஸியஸுக்கு நேரத்துடனேயே தெரிந்திருந்தன.

இது தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்னால், அர்ஜுன் அலோஸியஸின் தொலைபேசி உரையாடல் பதிவுகள் நேற்றுக் கேட்கப்பட்ட போதே இந்த விடயம் அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

இந்தப் பிணை முறிகள் ஏலத்துக்கு விடுவது தொடர்

பக்கம் 18 »

## அலோஸியஸுக்கு அழைப்பாணை

வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு அர்ஜுன் அலோசியஸுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணை முறி விவகாரம் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் ஆணைக் குழுவே இந்த அழைப்பாணையை அனுப்பியுள்

பக்கம் 18 »

காலைக்கதிர் Kalaikkathir



# வவுனியா நகரசபையின் நடவடிக்கைக்கு எதிராக ஒருவர் தீக்குளிக்க முயற்சி!





## நிலைமையை கட்டுப்படுத்தினர் பொலிஸார்!

வவுனியா, செப். 07

வவுனியா நகரசபையின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா சந்தைச்சுற்றுவட்ட வீதியில் வியாபாரம் செய்யும் வியாபாரி ஒருவர் தீக்குளிக்க முயற்சி செய்துள்ளார். இதனை பொலிஸார் தலையிட்டு கட்டுப்படுத்தியுள்ளனர்.

நேற்று மதியம் 12.00மணி யளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வந்தவை வருமாறு:-

வவுனியா சந்தைச் சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் சில அத்துமீறி பாதையில் விற்பனை பொருள்களை விற்பனை செய்வதை அடுத்து வவுனியா நகரசபையினர் அத்துமீறி வீதியில் வைத்தி ருத்த பொருள்களை அகற்றுமாறு வர்த்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இதன் போது அந்தப் பாதையில் மதுபானசாலைக்கு அருகே அமைந்துள்ள மரக்கறி வியாபாரம் செய்யும் வர்த்தகர் ஒருவர் தனது பொருள்களை அகற்ற முடியாது என மறுப்பு தெரிவித்ததுடன், அத்துமீறி நகரசபையினர் அகற்றினால் நான் தற்கொலை செய்வேன் எனத் தெரிவித்து தனது உடல் முழுவதும் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் அந்த நபரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா நகர சபை செயலாளர் இ.தயாபரன் அந்த வர்த்தக நிலையமும், அப்பகுதியில் உள்ள நகையகம் ஒன்றும் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ளன.

எனவே இரு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் உத்தியோகபூர்வமாக கடிதம் அனுப்பி அந்தக் கட்டடத்தை அகற்றி பாதையை திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

(க 100)


# முன்னாள் போராளிகளை எள்ளிநகையாடும் பெரும்பான்மையினர்!

யாழ்ப்பாணம், செப். 05

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் என பெரும்பான்மையினர் சமூகம் எள்ளி நகையாடுவது வேதனை அளிப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு எள்ளி நகையாடப்படும் முன்னாள் போராளிகள் கடந்த காலங்களில் பல்வேறு ஆளுமைகளைக்கொண்டு விளங்கியவர்கள் என வடமாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டினர்.

யாழ்ப்பாணம் - இந்து மகளிர் கல்லூரியின் பவள விழா மண்டபத் திறப்பு விழா நிகழ்வு நேற்றுக்காலை இடம் பெற்றது.



இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

வடக்கில் புதிய பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், வறுமை காரணமாகச் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாது கூலி வேலைகளுக்குச் செல்கின்றனர் என்றும் வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கவலை வெளியிட்டார்.

# குற்றங்களைக் குறைத்து சிறப்பாகச் செயற்பட்ட வவுனியா பொலிஸாருக்குக் கௌரவிப்பு!

வவுனியா, செப். 07

இலங்கை பொலிஸ் திணைக்களகத்தின் 151ஆவது வருட நிறைவை முன்னிட்டு வவுனியாவில் குற்றங்களைக் கட்டுப்படுத்தி சிறப்பாகச் செயற்பட்ட பொலிஸாரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைவாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோ தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கடந்த மாதத்தில் வவுனியாவில் குற்றங்களைக் கட்டுப்படுத்தி சிறப்பாகச் செயற்பட்ட பத்து பொலிஸாரும் பணப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து கடமையிலிருக்கும் போது உயிர்த்தியாகம் செய்த பொலிஸாரின் குடும்ப







உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுடைய குறைகளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கேட்டறிந்து கொண்டார். அவர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகளின் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்ப உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(க-100)

# அதிரடிப்படையினருக்கு பதவி உயர்வு வழங்கல்!

கொழும்பு, செப். 07

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து சேவையில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ள 117 அதிகாரிகளுக்குக் குறித்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 93 சார்ஜன்ட்டுகள் சப் இன்ஸ்பெக்டர்களாகவும், 84 சப் இன்ஸ்பெக்டர்கள் இன்ஸ்பெக்டர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. இந்தப் பதவி உயர்வுகள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மூலம் வழங்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்!

கொழும்பு, செப். 07

இலங்கை கடற்படையினர் தமிழகக் கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என இந்தியத்தொலைக் காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கச்சதீவு அருகே நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் 10 தமிழக கடற்றொழிலாளர்கள் காயமுற்றனர் எனவும் 20 படகுகள் சேதமடைந்தன எனவும் காவல்துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவு இராமேஸ்வரத்திலிருந்து கடலுக்குச் சென்ற 2 ஆயிரத்து 500 கடற்றொழிலாளர்கள் நேற்று முன்தினம் காலை கரை திரும்ப நேரிட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 80 தமிழக கடற்றொழிலாளர்கள் நல்லெண்ணத்தின் அடிப் படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும்

# தென்னிலங்கை மீனவர்களினால் வடக்கு தமிழ் மீனவர்கள் அவலத்தில்!



வடபகுதிக் கடலில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களால் தமிழ் மீனவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை மாத்தளன் கடற்பரப்பில் கடலட்டை வேட்டையில் ஈடுபட்டிருந்த தென்னிலங்கை மீனவர்கள் தமிழ் மீனவர்களின் படகுகளைச் சேதப்படுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் கடற்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளில் தென்னிலங்கையிலிருந்து வந்து சட்டவிரோத கடலட்டை வேட்டையில் ஈடுபடும் மீனவர்களால் கடந்த 4 ஆம் திகதி மற்றும் நேற்றும் அதிகாலையில் தமிழ் மீனவர்களின் படகுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மீனவர்களின் படகுகளைச் சேதப்படுத்துவது மாத்திரமன்றி அவர்கள் கடலில் தத்தளிக்கும்போதும் அவர்களைக் காப்பாற்றாது இரக்கமற்ற செயலில் ஈடுபடுகின்றனர் எனவும் மாத்தளன் பகுதி மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மாத்தளன், சாலையை அண்டிய பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழ் மீனவர்களின் படகுகளைச் சேதப்படுத்திய தென்னிலங்கை மீனவர்கள், அவர்கள் கடலில் குதித்துத் தத்தளித்த போது அவர்களை நோட்டமிட்டவாறு அந்தப் பகுதியை விட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறான நிலையில் மாத்தளன் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றி கரைசேர்த்துள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து பொருளாதார ரீதியில் மீண்டெழுவதற்குத் தாம் போராடி வரும் நிலையில் சட்டவிரோத மீன்பிடி காரணமாக தாம் மிகவும் பாதிப்படைகின்றனர் என பாதிக்கப்பட்ட இந்த மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக தென்னிலங்கை மீனவர்களால் தமிழ் மீனவர்கள் தாக்குதலுக்குள்ளாகின்றமையைத் தாம் கண்டிக்கின்றார் எனத் தெரிவிக்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவ்வாறான சம்பவங்களை தொடர்ந்து அனுமதிக்க முடியாது எனவும் கூறினார்.

# பிணை முறி விவகாரத்தில் ரோஸியும் சிக்கினார்!



கொழும்பு, செப். 07

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற விசாரணைக்குழுவின் ('கோப்' குழுவின்) அறிக்கை, அந்தக் குழுவில் அங்கம் வகித்த முன்னாள் அமைச்சர் ரோஸி சேனநாயக்காவின் மகனான கனிஷ்கா சேனநாயக்கா மூலம் பிணை முறி விவகாரத்தில் விசாரணையில் சிக்கியுள்ள அர்ஜுன் அலோஸியஸின் நிறுவனத்துக்குக் கிட்டியிருக்கின்றது.

மேற்படி பிணை முறி விவகாரம் குறித்து விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு இந்த விடயங்களைக் கண்டு பிடித்திருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்றத்தில் எம்.பியாகவும், கடைசி எட்டு மாதங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அப்போதைய அரசில் அமைச்சராகவும் இருந்தவர் ரோஸி சேனநாயக்கா. கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட அவரால் வெற்றிபெற முடியவில்லை.

முன்னைய நாடாளுமன்றத்தில் கோப் குழுவில் ரோஸி சேனநாயக்கா அங்கத்தவராக இருந்தார்.

அச்சமயத்தில் 'கோப்' குழுவினால் தயாரிக்கப்பட்ட விசாரணை அறிக்கை வெளியே பகிரங்கப்படுத்தப்படாத நிலையில் ரோஸி சேனநாயக்கவின் மகன் மூலம் அது அர்ஜுன் அலோஸியஸின் நிறுவனத்துக்குக் கிட்டியிருக்கின்றது.

அர்ஜுன் அலோஸியஸின் நிறுவனத்தின் தொலைபேசிப் பதிவுகளை ஒருவாறு மீட்டெடுத்து, ஜனாதிபதி ஆணைக் குழு நேற்று செவிமடுத்த போதே இந்த விடயம் அம்பலமாகியிருக்கின்றது. (உ)

# நாயன்மார்கட்டு வாள்வெட்டுக்குழு அடையாளம் காணப்பட்டுள்ளதாம்!

யாழ்ப்பாணம், செப். 07

திருநெல்வேலி, வாழையம்மன் கோவில் பகுதி மற்றும் வெள்ளைப்பிள்ளையார்கோவில் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் நுழைந்து, சொத்துகளுக்குச் சேதம் விளைவித்த வாள்வெட்டு குழு, அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கும்பல், யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டுப் பகுதியைச் சேர்ந்தது என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இதன்போது 10 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தில், 10 இளைஞர்கள் இரண்டு முச்சக்கரவண்டிகள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்திருந்தனர் என முறைப்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 03ஆம் திகதி இரவு வாழையம்மன் கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மதிலில் ஏறிப்பாய்ந்து உள்ளே சென்ற வாள்வெட்டுக் கும்பல், வீட்டு முன் கதவை அடித்துடைத்துச் சேதப்படுத்தியதுடன், வீட்டு ஜன்னல் கண்ணாடிகளையும் உடைத்துள்ளது. இதனால், வீட்டு உரிமையாளருக்கு 12,000 ரூபா சொத்திழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல், வெள்ளைப் பிள்ளையார் கோவில் பகுதியில் உள்ள வீட்டுக்கு, அதே இரவு சென்ற இதே வாள்வெட்டுக்கும்பல், வீட்டின் மேல்மாடியில் இருந்த ஜன்னல்களை அடித்துடைத்துச் சேதம் விளைவித்துள்ளது.

மேலும், வீட்டுக்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் வாளால் கொத்திச் சேதம் விளைவித்துள்ளது. இச்சம்பவத்தால், 16 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளர்கள் வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில், மேற்படி கும்பலைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ)

# இலங்கை கிரிக்கெட் அணியை வெள்ளையடித்தது இந்தியா

## கடைசியில் ரி20 ஆட்டத்திலும் மண்கவ்வியது




இலங்கை டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கிலும், ஒரு நாள் தொடரில் 5-0 என்ற கணக்கிலும் தோற்கடித்த இந்தியா, எஞ்சியிருந்த ஒரேயொரு ரி-20 ஆட்டத்திலும் இலங்கையை தோற்கடித்து, முழு வெள்ளையடித்த திருப்தியோடு இந்தியா திரும்புகின்றது.

நேற்று இரவு கடைசியாக நடைபெற்ற 'ரி-20' ஆட்டத்திலும் மூன்று பந்துகள் எஞ்சியிருக்கையில் ஏழு விக்கெட்டுகளினால் வென்றது இந்தியா.

கொழும்பு பிரேமதாஸா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு 7 மணி முதல் இந்த ஆட்டம் நடைபெறவிருந்தது. எனினும் மழை காரணமாக மைதான எல்லைப் புறங்களில் இருந்த நீர் வடிவதற்கு இடமளித்து, 40 நிமிடங்கள் தாமதமாக இந்த ஆட்டம் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் இலங்கை அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய தில்ஷான் முனவீர 29 பந்துகளுக்கு 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

ஹசான் பிரியன்ஜன் 41 ஓட்டங்களையும், இசுரு உதான 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் சஹால் 3 விக்கட்டுக்களையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

171 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 19.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்திய அணி சார்பில் அதிரடியாக விளையாடிய இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி 82 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். மனிஸ் பாண்டே ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களைப் பெற்றார். (உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தலைமையின் தவறு

நேற்று இப்பத்தியில் நாம் குறிப்பிட்டபடி, அரசமைப்பின் இருபதாவது திருத்தம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற – பிரதமர் தலைமையிலான – அரசுத் தரப்பின் கூட்டம் ஒன்றில் அடியோடு மாற்றப்பட்டு விட்டது.

இந்தத் திருத்தம் தொடர்பில் பெரும்பாலான மாகாண சபைகளில் தெரிவிக்கப்பட்ட அதிருப்திகளை – சஞ்சலங்களை – கேள்விகளை – சந்தேகங்களை – களையும் விதத்தில் இருபதாவது திருத்த நகல் மீண்டும் திருத்தப்பட்டிருக்கின்றது.

இருபதாவது திருத்தம் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட போது பல மாகாணசபைகள் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருந்தன.

★ இப்போது மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரு வருடம் ஒத்திவைத்தால், அதற்குப் பிறகும் அவை தொடர்ந்து – இதே அரசால் – ஒத்திவைக்கப்பட மாட்டா என்பது என்ன நிச்சயம்?

★ ஒரு மாகாண சபை அதன் ஆட்சிக்காலத்தில் இடையில் கலைக்கப்பட்டால், அதன் எஞ்சிய கால நிர்வாகம் நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும் என்ற ஏற்பாடு இருப்பதால், ஆளும் தரப்பு தனக்குத் தேவையான மாகாண சபைகளைக் கலைத்துவிட்டு, தனது நேரடியான ஆட்சியை அங்கெல்லாம் நடத்தாதா?

– என்பன போன்ற பல கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் சந்தேகம் தீர்க்கும் விதத்தில் இருபதாவது திருத்த நகலை அடியோடு மாற்றுவதற்கு அரசுத் தரப்பு நேற்று முன்தினம் முடிவெடுத்துவிட்டது. அதன்படி –

மேற்படி இரண்டு விடயங்களிலும் நாடாளுமன்றம் தலையிடவே முடியாத வகையிலான – திட்டவட்டமான – ஏற்பாடுகளை இருபதாவது திருத்தம் கொண்டிருக்கத் தக்க வகையில் அந்தத் திருத்த நகலில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

முதல் தடவை எல்லா சபைகளுக்குமான தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்துவது தொடர்பான தேர்தல் திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் இருக்காது. அத்திகதி இருபதாவது திருத்தத்திலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். இருபதாவது திருத்தம் நடைமுறைக்கு வந்து சரியாக ஒரு வருடத்தில் எல்லா மாகாணசபைகளும் கலைக்கப்பட்டவையாகும் என்பதும் அதனைத் தொடர்ந்து அவை அனைத்துக்கும் தேர்தல்கள் ஒரே சமயத்தில் நடக்கும் என்பதும் இருபதாவது திருத்தத்திலேயே இடம்பெற்றிருக்கும்.

அதுபோலவே, ஒரு மாகாணசபை முற்கூட்டியே கலைக்கப்பட்டால் அதன் எஞ்சிய பதவிக் காலத்தில் அதனை நிர்வகிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குப் போகாது. அதற்கான ஏற்பாடுகள் யாவை என்பதும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் இருபதாவது திருத்தத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும்.

இருபதாவது திருத்த நகலில் இத்தகைய மாற்றங்கள் வந்த பின்னர் இனி வடக்கு, கிழக்கு மாகாணசபைகள் இந்தச் சட்டமூலம் தொடர்பில் என்ன முடிவை எடுக்கப் போகின்றன? இந்த விடயத்தில் முடிவெடுப்பதற்காக இரு சபைகளுமே இன்று கூடவிருக்கின்றன.

அவை மூன்று விடயங்களைக் கவனத்தில் எடுப்பது நல்லது; கட்டாயமானது.

ஒன்று – அவை ஏற்கனவே சந்தேகம் தெரிவித்த விடயங்களுக்கு தீர்வு தரும் விதத்தில் இருபதாவது திருத்தம் மாற்றப்பட்டிருக்கிறது.

இரண்டு – இந்தத் திருத்தம் தொடர்பில் மாகாண சபைகள் எந்த முடிவை எடுத்தாலும், உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இது நிறைவேற்றப்படுமானால் மாகாணசபைகளின் எதிர்ப்பு எந்தச் சட்டத் தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டா. ஆகவே, இப்போது வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் இதனை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றினாலும் அரசு இதனை எப்படியும் தனக்குள்ள பலத்தைப் பிரயோகித்து நிறைவேற்றவே பார்க்கும்.

மூன்றாவது – இப்போது மாகாணசபைகள் கிளப்பிய சந்தேகங்களுக்கு – கேள்விகளுக்கு – உரிய பதிலும் விளக்கமும் தரும் விதத்தில் இருபதாவது அரசமைப்புத் திருத்த நகலை நேற்று முன்தினம் பிரதமருடன் சேர்ந்து பேசி மாற்றியமைத்தவர் வேறு யாருமல்லர் – தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும், அரசமைப்பு உருவாக்க விடயத்தில் அதிகம் ஈடுபட்டுவருபவருமான எம்.ஏ. சுமந்திரன் எம்.பிதான் அவர்.

அவர் சம்பந்தப்பட்டு – அவரின் ஆலோசனைக்கு அமைய –அவரது வழிகாட்டலுடன் – இருபதாவது திருத்த நகல் திருத்தப் பட்டிருப்பதால், அது நாடாளுமன்றத்துக்கு வரும் போது அதனைத் தமிழ்க் கூட்டமைப்பு ஆதரிப்பதற்கான சாத்தியமே அதிகம் காணப் படுகிறது.

அப்படிக் கூட்டமைப்பு ஆதரிக்குமானால் அந்தச் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைப்பதும் பெரும்பாலும் சாத்தியமே என்றே தோன்றுகின்றது. தமிழ்க் கூட்டமைப்பில் இவ்விடயங்களைக் கையாளும் தலைமைப் பகுதி இந்த அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் ஒரு கருத்து நிலைப்பாடு எடுக்குமாயின், அது, அதன் அங்கத்துவத் தரப்புகளுக்கும் விவரமாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும்; தெளிவுபடுத்த வேண்டும்.

ஆனால் இதுவரை அப்படி நடந்ததாகத் தெரியவில்லை.

தலை ஒரு புறம் செயற்பட, வால் மறுபுறமாகச் செயற்படக் கூடாது. இருபதாவது திருத்த விடயத்தில் கூட்டமைப்புத் தலைமை தனது அங்கத்துவத் தரப்புகளுக்கு இன்னும் தெளிவான வழிகாட்டலை வழங் கியதாகத் தெரியவில்லை. அது தலைமையின் தவறுதான்.

## கருணாவின் விசாரணைகள் நிறைவு!

கொழும்பு, செப். 07

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 9 கோடி பெறுமதியான குண்டு துளைக்காத வாகனம் ஒன்றைத் தவறான முறையில் பாவித்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிரான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன– என நிதி மோசடி விசாரணைப் பிரிவு நேற்று நீதிமன்றுக்கு தெரிவித் துள்ளது.



விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகள் தொடர்பில் சட்ட மா அதிபரிடம் ஆலோசனை பெறப்படவிருப்பதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளைச் சந்தேக நபர் தொடர்பில் இதுவரை சட்ட மா அதிபர் மூலம் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவில்லை என பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனக் கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

## வடமாகாண சுகாதார அமைச்சருடன் மன்னாரில் அவசர கலந்துரையாடல்!

கொழும்பு,செப். 07

மன்னாரில் அண்மையில் மலேரியா நோயைப் பரப்பும் 'அனாஅக் பிலிஸ் ஸ்டீபென்சி' என்ற நுளம்பின் புதிய வகை காவியின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ. குணசீலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதிய வகை நுளம்பைக் கட்டுப்படுத்தும் விடயமாக





மன்னார் தீவுப் பகுதியில் இந்த நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பத்தாம் நாள் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் தீவுப் பகுதியில் அண்மையில் மலேரியா நோயைப் பரப்பும் 'அனாஅக் பிலிஸ் ஸ்டீபென்சி' என்ற நுளம்பின் புதிய வகை காவி அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த நுளம்பின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

நோயைப் பரப்பும் 'அனாஅக் பிலிஸ் ஸ்டீபென்சி' என்ற நுளம்பின் புதிய வகை காவியால் எதிர்காலத்தில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

ஆரம்பத்திலேயே இந்த நுளம்பு இனத்தின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசர தேவை உள்ளது என்றும் வடக்கு சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவுப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் மன்னார் தீவுப் பகுதியில் உள்ள கிராமங்களை 7 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிகளுக்கும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இவர்களுக்கு கீழ் உப குழுக்கள் நியமிக்கப்பட்டு இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இதன் போது குறித்த பிரதேசங்களில் உள்ள பயன்படுத்தப் பட்ட மற்றும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற கிணறுகள் மற்றும் நீர்த் தொட்டிகள் போன்றவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.


இதேவேளை, இந்த அவசர கலந்துரையாடலின் போது, தேசிய மலேரியாத் தடை இயக்கத்தின் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத், மன்னார் உதவி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கில்றோய் பீரிஸ், மலேரியா நோய் தடுப்புப் பிரிவின் மன்னார் மாவட்ட பிராந்திய வைத்திய அதிகாரி வைத்தியர் கே. அரவிந்தன், பொது சுகாதார வைத்திய அதிகாரிகள், மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட மலேரியா நோய் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

### மாகாண மட்ட வினாடி – வினாப் போட்டி:

## யாழ்.கல்வி வலய அணியை வீழ்த்தி கிளிநொச்சி அணி முதலிடம் பெற்றது

யாழ்ப்பாணம்,செப். 07

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப் பட்ட கனிஷ்ட பிரிவுக்கான மாகாண மட்ட கணித வினாடி வினாப் போட்டியில் கிளிநொச்சி வலய அணி முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மேற்படி போட் டியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கல்வி வலய அணிகள் பங்கு கொண்டன.

இப்போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான யாழ்ப்பாண வலய அணியை வீழ்த்தி கிளிநொச்சி வலய அணி சம்பியனானது.

அத்துடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ள வடக்கு மாகாண அணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 6 இல் கல்வி கற்கும் தெ.திருக்குமரன் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவன் அண்மையில் நடைபெற்ற தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு சிங்கப்பூரில் நடைபெறவுள்ள சர்வதேசமட்டப் கணித ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### நாளை

08.09.2017
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : உத்தரட்டாதி பி.ப 02.14 வரை
திதி : துதியை மு.ப. 11.42 மணி வரை
சுபநேரம் : 06.04 – 07.34 வரை
இராகுகாலம் : 10.34 – 12.04 வரை

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அவசியம் 13ஆம் திருத்தம் மூலமே அதிகாரப் பகிர்வு!

கொழும்பு, செப். 06

புதிய அரசமைப்பு தொடர்பிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்மொழிவுகள் நாடாளுமன்ற வழிநடத்தல் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் 13 ஆம் திருத்தத்தின் மூலமான அதிகாரப் பகிர்விற்கு ஆதரவு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

புதிய அரசமைப்பு குறித்த சகல கட்சிகளினதும் முன்மொழிவுகள் நாடாளுமன்ற வழிநடத்தல் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த விடயத்தில் இழுத்தடிப்புகளை முன்னெடுத்து வந்தது.

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வலியுறுத்தல்

இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை ஆராய்ந்து கட்சியின் முன்மொழிவுகளை வழங்கும் வகையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் ஜனாதிபதி குழுவொன்றை நியமித்திருந்தார்.

இரண்டு மாத கால எல்லையில் தமது நிலைப்பாடுகளை முன்வைப்பதாக இவர்கள் தெரிவித்திருந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்மொழிவுகளை வழிநடத்தல் குழுவில் சமர்ப்பித்துள்ளது என தெரியவருகின்றது.

அதிகாரப் பகிர்வு மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் முரண்பட்டு வந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர், தற்போது 13 ஆம் திருத்தத்தின் மூலமாக அதிகார பகிர்வை நோக்கிச் செல்ல இணக்கம் தெரிவித்துள்ளனர்.

சகல தரப்பினரதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அதிகார பகிர்வை முன்னெடுக்க முடியும் என இதன்போது அவர்கள் இணங்கியுள்ளனர்.

அதேபோன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்தும் தாம் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதியின் அதியுச்ச அதிகாரங்களை நீக்க வேண்டும் எனினும் அதிகாரங்களை முழுமையாகப் பறிப்பதை ஒற்றையாட்சி நாட்டில் உகந்த செயற்பாடாகக் கருத முடியாது எனத்தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

ஆகவேபுதியஅரசமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இருக்க வேண்டும் என்பதைச்சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், இலங்கைக்கான சட்டங்களை இலங்கையின் நீதிமன்றங்களின் மூலமாகக் கையாளவேண்டும் என்பதை புதிய அரசமைப்பு ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட முக்கிய எட்டு விடயங்களை உள்ளடக்கிய தமது முன்மொழிவுகளை நாடாளுமன்ற வழிநடத்தல் குழுவிற்குச் சமர்ப்பித்துள்ளது என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை – இந்திய கடற்படைகளின் கூட்டுப்பயிற்சிகள் இன்று ஆரம்பம்!

இலங்கை-இந்திய கடற் படைகளின் கூட்டுப் பயிற்சிகள் இன்று ஆரம்பமாகின்றன. கூட்டுப் பயிற்சிகளுக்காக இலங் கையில் இருந்து சயுர மற்றும் சாகர ஆகிய ரோந்துக் கப்பல்களுடன் 368 கடற் படையினர் விசாகப் பட்டினம் செல்கின்றனர்.

இந்து சமுத்திர கடல் எல்லை பாதுகாப்புக் கருதியே இந்தக் கூட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆண்டு தோறும் நடத்தப்படும் கூட்டுப் பயிற்சியில் இந்தியக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொள் வதற்காக இலங்கையின் கடற்படை நேற்று முன்தினம் இந்தியாவின் விசாகப்பட்டினம் நோக்கி பயணமானது.

இன்று இரு நாடுகளின் கூட்டுப் பயிற்சிகள் ஆரம் பிக்கப்படவுள்ள நிலையில் இலங்கை கடற் படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களான சயுர மற்றும் சாகர ஆகிய இரண்டு பாரிய போர்க் கப்பல்கள் மற்றும் 43 கடற்படை அதிகாரிகளும், பயிற்சி நிலை அதிகாரிகள் 60 பேர் உள்ளடங்கலாக 368 கடற்படையினருடன் கடந்த திங்கள் கிழமை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து விசாக பட்டினத்திற்கு புறப்பட்டுச் சென்றுள்ளன.

நேற்று முன்தினம் காலை இலங்கை கடற்படையினர் விசாகப்பட்டினம் துறைமுகத்தைச் சென்றடைந்துள்ளனர்.

இந்த நிலையில், இன்று இலங்கை இந்திய கடற்படையினரின் கூட்டு பயிற்சிகள் ஆரம்பமாகின்றமையுடன் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி வரையில் இந்திய - இலங்கை கடற்படைகளின் கூட்டுப் பயிற்சிகள் இடம்பெறும்.

இந்து சமுத்திர கடல் எல்லை பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து நிலவிவரும் நிலையில், அதனை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கூட்டுப் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில், இந்தியாவிடம் இருந்து மேலுமொரு கடலோர பாதுகாப்பு ஆயுதக் கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ள இலங்கை கடற்படையினர், குறித்த கடலோர பாதுகாப்பு கப்பலையும் இணைத்து இந்த கூட்டுப் பயிற்சிகளை முன் னெடுக்கவுள்ளதாகக் கூறப்படுவதுடன் எதிர்வரும் 15 ஆம் திகதி புதிய கப்பல் இலங்கைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் நடைபெற்ற விபத்து; சர்வதேச ஊடகத்தில் காணொலி!

கடந்த வாரம் இலங்கையில் இடம்பெற்ற விபத்து தொடர் பில் சர்வதேச ஊடகம் ஒன்று கவனம் செலுத்தியுள்ளது.

அதிவேகமாக வந்த கார் ஒன்று பயணிகள் நிறைந்த பஸ் ஒன்றை கணப்பொழுதில் புரட்டித் தள்ளிய அதிர்ச்சி காணொலி ஒன்றை குறித்த ஊடகம் வெளியிட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி மஹரகம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 19 பல்கலைக்கழக மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்த விபத்து தொடர்பில் வெளியாகியுள்ள சீ.சீ.ரி.வி காணொலிக் கமைய, வேகமாக காரை ஓட்டி வந்த சாரதிக்கு அதனை நிறுத்தி கொள்ள நொடியேனும் நேரம் காணப்படவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

அந்த நிலையில் கார், பய ணிகள் பஸ் மீது மோதியதால் பஸ் பல அடி தூரத்திற்குப் பறந்து சென்று புரண்டுள்ளது என ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விபத்தின் பின்னர் அருகில் இருந்த சீ.சீ.ரி.வி கமராவில் விபத்தின் காட்சிகள் பதிவாகியுள்ளது. இதேவேளை, விபத்துக்குக் காரணமாக இருந்த காரின் முன் பக்கம் முழுமையாக சேதமடைந்துள்ளது.

மொத்தமாக 65 பேர் அந்த பஸ்ஸில் பயணித்துள்ள நிலையில் விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்து தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விபத்து சீ.சீ.ரி.வி காட்சி காணொலியை பல்லாயிரம் கண்காணோர் பார்வையிட்டுள்ளனர்.

(ப)

# மோசமான பெண்களின் பட்டியலில் இடம்பிடித்தார் மஹிந்த மனைவி!



கொழும்பு, செப். 06

உலகின் மோசமான குற்றச்சாட்டுக்களில்சிக்கியுள்ளமுதல்ஐந்துபெண் மணிகளில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை ரகர் வீரர் வசீம் தாஜுடீன் 2012 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ரகர் வீரர் வசீம் தாஜுடீன் இறப்பு வாகன விபத்தாகக் கருதப்பட்ட போதிலும், தற்போது அது கொலையாக விசாரிக்கப்பட்டு வருகிறது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், அவரது தொண்டு நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனம் அந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது என அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நல்லிணக்கப் பொறிமுறைக்கு ஜப்பான் தொழில்நுட்ப உதவி!

கொழும்பு, செப். 07

இலங்கை கசப்பான கடந்த காலத்தை நோக்கி மீண்டும் சென்றுவிடாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக ஜப்பானிய அரசு நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியான அபிவிருத்திக்கு உதவி வருகிறது என இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகனுமா தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் இலங்கை அரசால் முன் னெடுக்கப்படும் தேசிய நல்லிணக்கப் பொறிமுறை உருவாக்கத்துக்கும் புதிய அரசியல் சாசனம் பற்றிய கலந்துரையாடலுக்கும் ஜப்பான் பங்களித்து தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கி வருகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட உதவும் வகை யில் கடந்த காலத்தில் ஜப்பானிய அரசு யசூசி அகாஷியை நியமித்திருந்தது.

தற்போது ஜப்பான் எந்த வகையில் பங்களிப்பு வழங்கி வருகின்றது என ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ஜப்பானியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை கடந்த காலத்துக்குத் திரும்பிவிடக்கூடாது என்பதற்காக நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

அந்தவகையில், இலங்கை அரசு தேசிய நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்வது மிகவும் முக்கியமானதெனக் கருதுகின்றோம்.

தேசிய நல்லிணக்கப் பொறிமுறையை உருவாக்கும் தற்போதைய அரசின் முயற்சிகளுக்கும் அரசமைப்பு தொடர்பான கலந்துரையாடலுக்கும் நாம் ஆதரவு வழங்குகின்ற அதே வேளை, இந்தப் பொறிமுறைகளுக்கு தொழில்நுட்ப ரீதியான சில ஆலோசனைகளையும் வழங்குகின்றோம் என்றும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகனுமா குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல் முடிந்ததும் சமூகப் பார்வையோடு அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்!

## பிரதி அமைச்சர் அமீர் அலி தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 07

அரசியல் தலைவர்களுக்கு இடையில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று தெரியாமல் இருக்கின்ற கிழக்கு முதலமைச்சருக்கு சிரேஷ்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் நல்ல செயற்பாடுகளைக் கற்றுக்கொடுத்திருக்கின்றார்கள் என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புனாணை மேற்கு, கிடச்சிமடு விசரோடை பாலத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் விவசாய அமைப்பின் தலைவர் எம்.வி.அஹமட் லெப்பை தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் அமீர் அலி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் தலைவர்களுக்கிடையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியாமல் இருக்கின்ற கிழக்கு முதலமைச்சர், ஹிஸ்புல்லாஹ் போன்ற சிரேஷ்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளை பார்த்து அரசியல் நாகரிகத்தை கற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.





தேர்தல் காலங்களில் மாத்திரம் அரசியல்வாதிகள் கருத்து மோதலால் பிரிந்து இருப்பார்கள். தேர்தல் முடிந்ததும் சமூகப் பார்வையோடு அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படுபவர்கள் தான் சிறந்த அரசியல்வாதிகளாக இருக்க முடியும். கல்குடா பிரதேசம் விவசாய சமூகம் மற்றும் மீன்பிடி சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகமாகும்.

இந்த இரு சமூகமும் சிறப்பாக இருந்தால் மாத்திரம் தான் பிள்ளைகளின் கல்வி, பிரதேச அபிவிருத்தி என்ற கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

பொத்தானை பிரதேசத்தில் 127 குடும்பங்கள் காலம் காலமாக வாழ்ந்து வந்த குடும்பம் இவர்களுக்கு வாக்காளர் பட்டியல், பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டைகள் அங்கு இருந்தமைக்காக ஆதாரமாக இருந்த போதும், அரச அதிகாரிகள் மீள்குடியேற அனுமதிக்கின்றார்கள் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எவ்வளவு நெருக்குதலோடு உங்களுக்கு சேவை செய்து வருகின்றோம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.



புனாணையில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வினால் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பல்கலைக் கழகத்தை பொதுபலசேனா அணியினர் வந்து இது கிழக்காசியாவிலே கட்டப்படும் பெரிய பள்ளிவாயல் என்று சொல்லும் அளவிற்கு இன்று மக்களுடைய மனநிலை மாறியிருக்கின்றது.

இலங்கையில் இல்லாத ஒரு பல்கலைக்கழகத்தைத் தனி மனிதனாக இருந்து செயற்படுவது சாமத்தியமான விடயமாகப் பார்க்க முடியாது. இது அவருடைய நேர்மைக்கு கிடைத்த வெற்றியாகும்.

ஒருவன் விழுகின்ற போது அவனை தூக்கி விடும் அரசியல்வாதியாக நாங்கள் செயற்படுகின்றோம்.

இன்னொருவன் செய்த வேலைத் திட்டத்தில் தங்களுடைய பெயரைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டது கிடையாது.

அரசியல் கலாசாரத்தின் படி பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கும் விடயத்தை ஆரம்பித்தவரை கொண்டு வந்தே திறந்து வைக்கப்பட வேண்டும்.

இந்த பாலத்தை ஆரம்பித்து வைக்கும் நாங்களே உயிரோடு இருந்தால் வந்து திறந்து வைப்போம். கிழக்கு முதலமைச்சரைப் போன்று செயற்பட மாட்டோம் என்பதை அவருக்கு முதல் பாடமாக தெரிவிக்கின்றோம்.

இனிவரும் காலங்களில் பல பாடங்களைப் படிப்பித்து காட்ட இருக்கின்றோம் என கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி குறிப்பிட்டுள்ளார்.

## காணாமற்போனோர் விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்கு!

மட்டக்களப்பு, செப். 07

மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 ஆயிரத்திற்கும் அதிக மான பொதுமக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின்போதும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலும் தமது உறவுகள் கையளிக்கப்பட்ட நிலை யிலும், கடத்தப்பட்ட நிலையிலும், சரணடைந்த நிலை யிலும் காணாமல் ஆக்கப்பட் டதாக மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி எஸ்.அரியமலர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, சரணடைந்த நிலைகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குழு ஒன்று நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பு கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போதே, காணாமல் போகச் செய்தல், மனித உரிமை மீறல்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் தொடர்பாகக் அந்தக் குழுவினரால் ஜனாதிபதின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்தச் சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குழுவுடன், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம்!

மட்டக்களப்பு, செப். 07

புதிதாக இடம்பெற்றுள்ள கிழக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் நியமனம் இனவாதத்தை தூண்டி விடுமோ என்ற அச்சம் எழுந் துள்ளதாக கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டிருப்பது குறித்து தாம் கரிசனை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரின் அதிரடி நடவடிக்கையாக முக்கிய ஏழு துறைகளுக்கான செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடமாற்றங்கள் விமர்சனத்திற்குரிய ஒன்றாககாணப்படாவிட்டாலும், கிழக்கு மாகாண ஆளுநரின் அதிரடி நடவடிக்கையாக முக்கிய ஏழு துறைகளுக்கான செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.




இந்த இடமாற்றங்கள் விமர்சனத்திற்குரிய ஒன்றாக காணப்படாவிட்டாலும் கிழக்கு மாகாணக் கல்விஅமைச்சின் செயலாளரின் இடமாற்றம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியில் இயங்கும் தேசிய அரசிற்கு முன்னுதாரணமாக விளங்கியது கிழக்கு மாகாணமாகும். இங்கு காலாகாலமாக இருந்து வந்த இனவாதம் தோற்கடிக்கப்பட்டு, இனங்களின் புரிந்துணர்வின் அடிப்படையிலேயே ஆட்சி அமைக்கப்பட்டுள்ளமை வரவேற்கப்பட்ட ஒன்றாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், புதிய கல்வி அமைச்சு செயலாளரின் நியமனம் மீண்டும் கிழக்கு மாகாணத்தில் இனவாதம் தலைதூக்கிவிட்டதா எனும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு கூட்டமைப்பு நிபந்தனையுடன் ஆதரவு!

கொழும்பு, செப். 07

மாகாணசபைகளின் அதிகாரங்களின் மீது நாடாளுமன்றத்தின் மூலம் மத்திய அரசு கைவைப்பதற்கு, வழி செய்யும் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவு வழங்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கியுள்ளது.

பிரதமருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது, குழுநிலை விவாதத்தின் போது 20 ஆவது திருத்தச் சட்டவரைவில் திருத்தங்களை முன்வைப்பதாக இணங்கியமையை அடுத்து, நிபந்தனையுடன் ஆதரவு வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரியவும் கலந்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

இலங்கை அரசால் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச்சட்டவரைவு, இரண்டு மாகாணசபைகளில் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, அதில் திருத்தங்களை முன்வைக்க விரும்புகிறது என அரசு அறிவித்திருந்தது.



## கொழும்பு ஆங்கில நாளிதழ் தகவல்

இந்தக் கலந்துரையாடலில், 20 ஆவது திருத்தச்சட்ட வரைவில், குழு நிலை விவாதத்தில் திருத்தங்கள் முன்வைக்கப்படுவது அவசி யம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதம் செப்ரெம்பர் மூன்றாவது வாரத்தில் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபருடனும், கட்சித் தலைவர்களுடனும் கடந்த திங்கள்கிழமையும்,செவ்வாய்க் கிழமையும் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதனிடையே 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கியிருக்கிறது என்று பிரதமருடனான கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குழுநிலை விவாதத்தின் போது குறிப்பிடத்தக்க திருத்தங்களைச் செய்தால், 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு ஆதரவளிக்க நாங்கள் இணங்கியுள்ளோம்.

இந்தத் திருத்த வரைவை நிறைவேற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு அரசுக்குத் தேவை.

திருத்தச்சட்ட வரைவில் திருத்தங்களை முன்வைப்பது தொடர்பாகச் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவிப்பார்.

இந்தத் திருத்தச்சட்ட வரைவின் பயன்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்குச் சரியான முறையில் தகவல்கள் பரிமாறப்படவில்லை என்ற விடயம் தொடர்பாக நாங்கள் பிரதமருடன் கலந்துரையாடினோம்.

திருத்தச்சட்ட வரைவில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாகக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், மாகாணசபை ஒன்றின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னர், நாடாளுமன்றத்தின் ஊடாக, அதனைக் கலைப்பதற்கு அதிகாரமளிக்கும் விதியில் திருத்தம் செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மாகாணசபையின் பதவிக் காலம் முடிந்த பின்னர், மேற்பார்வை அரசு ஒன்றை அமைப்பது குறித்தும், ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது,

தற்போதைய வரைவை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கட்டுப்பாடு மாகாணத்துக்குள் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் அது ஆளுநரின் கையில் இருக்கக் கூடாது. எனவே மேற்பார்வை அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும் அல்லது எஞ்சிய காலத்துக்காக உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

எமது கோரிக்கையை அடுத்து, 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு மீதான வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையிலும் அவ்வாறு தான் முடிவு செய்யப்பட்டுள்ளது.

குழு நிலை விவாதத்தின் போது, 20 ஆவது திருத்தச் சட்ட வரைவில், திருத்தங்களைச்செய்வதற்கு இணக்கம் காணப்பட்டால், திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிப்போம் என்று கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## மது அருந்திய சாரதிகளை அடையாளம் காட்டும் உபகரணம் பகிர்ந்தளிப்பு!



கொழும்பு, செப். 07

மது அருந்திய சாரதிகளை அடையாளம் காணும் எல்கோலைசர் டெஸ்ட் (சுவாச பரிசோதனை) குழாய்கள் நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, சுமார் 90 ஆயிரம் குழாய்கள் 486 பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் மேலும் கூறியுள்ளது.

## அமெரிக்காவின் பசுபிக் கட்டளை தளபதியுடன் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன சந்திப்பு!

கொழும்பு, செப். 07

இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி பி ஹரிசை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஆசிய -பசுபிக் பாதுகாப்பு தலைமை அதிகாரிகளின் 20 ஆவது கருத்தரங்கு கனடாவில் நடைபெற்று வருகிறது.

கடந்த திங்கள் கிழமை ஆரம்பமாகிய இந்தக் கருத் தரங்கு நேற்று வரை இடம் பெற்றது.

இதில், இலங்கையில் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பங்கேற்றுள்ளார்.




இந்தக் கருத்தரங்கின் ஒரு பக்க நிகழ்வாக அவர், அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி பி ஹரிசை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆழ்கடல் ரோந்துக் கப்பலை இலங்கைக்கு வழங்கிய இந்தியா!

கொழும்பு, செப். 07

இந்திய கடலோரக் காவல் படை நேற்று முன்தினம் வருண என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலை இலங்கைக் கடலோரக் காவல்படையிடம் அதிகாரபூர்வமாகக் கையளித்தது.




கொச்சியில் உள்ள கடற்படைத் தளத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், இந்திய கடலோரக் காவல் படையின் பணிப்பாளர் ராஜேந்திரசிங், இந்தக் கப்பலை, இலங்கைக் கடலோரக் காவல் படை யின் பணிப்பாளர் றியர் அட்மிரல் சமந்த விமலதுங்கவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ரணசிங்கவும் கலந்து கொண்டார்.

பயிற்சி மற்றும் கண்காணிப்பு பயன்பாட்டுக்காக இந்தக் கப்பலை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக இந்திய கடலோரக் காவல்படையின் செய்திக் குறிப்பில் கூறப் பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படைக்கு இந்தியக் கடலோரக் காவல் படையின்பயன்பாட்டில்இருந்த வரஹா என்ற ஆழ் கடல் ரோந்துக் கப்பல் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமும், விக்ரஹா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமும் இந்தியாவினால் வழங்கப்பட் டது.

இந்திய கடலோரக் காவல் படையிடம் இருந்து பெற்றுள்ள வருண என்ற ஆழ்கடல் ரோந்துப் படகிற்கு சிறிலங்கா கடலோரக் காவல் படை, SLCG-60 என்று பெயரிட்டுள்ளது. இதன் கட்டளை அதிகாரியாக கப்டன் நெவில் அமர உபயசீலி நியமிக்கப்பட்டுள்ளார்.

இது இலங்கைக்கு புறப்பட முன்னர், இதனை இயக்கும் செயல்முறைகள் தொடர்பாக இலங்கைக் கடலோர காவல் படை மாலுமிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

*சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில்*

# அகில இலங்கை சைவ மாநாடு அடுத்த வார இறுதியில் 3 தினங்கள்

### சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

யாழ்ப்பாணம், செப்.07

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு எதிர்வரும் 15, 16,17 ஆம் திகதிகளில் - வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் - காலை 8 மணி முதல் யாழ்ப்பாணம் கல்லூரி வீதியில் உள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறும். முதல் நாள் நிகழ்ச்சிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார்.

இந்து மதகலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

காலை 8 மணிக்கு வண்ணார் பண்ணை சிவன் கோவிலில் வழிபாட்டுடன் நிகழ்வு தொடங்கும். அங்கிருந்து ஊர்வலம் காங்கேசன்துறை வீதி, கஸ்தூரி வீதி வழியாக விழா மண்டபத்தை வந்தடையும்.

# யாழ். நகரப் பகுதியில் நாய்கள் தொல்லை!



இரவில் பயணம் செய்வோர் சிரமம்!

யாழ்ப்பாணம், செப்.07

யாழ். நகரில் அண்மைக் காலமாக நாய்களின் பெருக்கம் அதிகரித்து இருப்பதாக சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நாய்கள் இரவு பத்து மணிக்கு பின்பும் காலை ஐந்து மணிக்கு முன்பதாகவும் நகரில் நடமாடுகின்றன என பாதசாரிகளும் அதிகாலை வேளை தூரப் பயணங்களுக்குச் செல்லும் பயணிகளும் தெருக்களில் அச்சத்துடன் செல்வதாகவே தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கஸ்தூரியார் வீதி- இந்துக்கல்லூரி சந்திக்கும் வின்சர்சந்திக்கும் இடைப்பட்ட தூரத்திலும் மற்றும் பழைய தபாற்கந்தோர் வீதியில் உள்ள நீண்ட தூர தனியார் பேருந்துகள் தரிப்பிடத்துக்கு முன்பாகவும் இந்த நாய்கள் தனித்தும், பரவலாகவும் நின்று பாதசாரிகளுக்கு அச்சத்தை ஊட்டுகின்றன.

எனவே, அதிகாலை வேளையாழ். நகருக்கு தங்கள் பயணத்தை மேற்கொள்ள வரும் பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த நாய்களைக் கட்டுப்படுத்த யாழ். மாநகர சபைசெயற்படவேண்டுமென சமூக நலன் விரும்பிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

அண்மையில் கடந்த 29 ஆம் திகதி யாழ். நகரை அண்டிய பகுதியில் மதியத்துக்கும் பிற்பகல்வரைக்குமான இடைப்பட்ட நேரத்தில் நாயொன்று சுமார் இருபத்தைந்து பொது மக்களைக் கடித்தது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்மை குறிப்பிடத்தக்கது. (இ)

## தினசரி ராசி பலன் 07.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் 22 ஆம் நாள் பிரதமைத்திதி பகல் 11.52 மணி வரை. பின்னர் துவிதீயை. நட்சத்திரம். பூரட்டாதி பகல் 12.57 மணி வரை. பின்னர் உத்தரட்டாதி. சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 01.39 மணி முதல் 03.11 மணி வரை. சுபநேரம்: காலை 7.34 மணி முதல் 9.04 மணி வரை. திவசம் செய்ய வேண் டிய திதி: ஆவணிமாத தேய்பிறை துவிதியை.**

**பிறந்த நட்சத்திர வழிபாடு: பூரட்டாதி.**

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். அரசு வழியால் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளால் யோகம் உண்டாகும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். அலுவலகப் பணிகளில் வேலைப்பளு குறையும்.

**மிதுனம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. குடும்ப உறவுகள் சீராகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வருமானம் உயர்வடையும். தூர தேசத் தகவல்கள் சாதகமாகும்.

**கடகம் :** கவலையான நாள். மனதில் இனம் புரியாத கவலை உண்டாகும். பணத்தட்டுப்பாடு இருக்கும். செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுவார்கள்.

**சிம்மம்:** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். ஆன்மீகப் பணியில் நாட்டம் கூடும். அலுவலகப் பணியில் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**கன்னி:** மேன்மையான நாள். செல்வாக்கும், மதிப்பும் கூடும். வியாபார லாபம் வெற்றியைத் தரும். திருமணத் தடை நீங்கும். சகோதர வழியால் நன்மை உண்டாகும்.

**துலாம் :** நன்மையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். மனதில் கவலைகள் குறைந்து காணப்படும்.

**விருச்சிகம் :** சலனம் மிகுந்த நாள். மனம் சஞ்சலமடையும். கில முட்டுக்கட்டைகள் குறுக்கிடவே செய்யும். உடல் அசௌகரியம் ஏற்படும். பணம் தட்டுப்பாடாக இருக்கும்.

**தனுசு :** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பார்கள். வீட்டில் சுபகாரியம் விமரிசையாக நடக்கும். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**மகரம் :** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். தள்ளிப் போன காரியமொன்று தகுந்தவாறு நடக்கும். உறவினர் வீட்டு விருந்து விசேசங்களில் கலந்து மகிழ்வார்கள்.

**கும்பம் :** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் குதூகலம் கொடி கட்டிப் பறக்கும். வீடு, தோட்டம் முதலியவற்றால் லாபம் வரும்.

**மீனம்:** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோக விடயமாக அலைய வேண்டி வரும். சிலர் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்காக அலைந்து திரிவார்கள்.

**சந்திராட்டமநாள்: மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# கடற்படைத் தளபதி— சபாநாயகர் கரு சந்திப்பு!

கொழும்பு, செப். 07

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா, சபாநாயகர் கரு ஜயசூர்யா ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நாடாளுமன்றத்திலுள்ள அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவையும் வைஸ் அட்மிரல் ட்ரவிஸ்சின்னையாபொலிஸ் தலைமையகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (க)

### கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும்

# சர்வதேசப் பிரகடனத்தில் கையெழுத்திடும் இலங்கை!




கொழும்பு, செப். 07

கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் சர்வதேச பிரகடனத்தில் இலங்கை இணைந்துக் கொள்ளும் என்று, ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதுவர் ரவினாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் கடந்த திங்கட்கிழமை நடந்த கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் சர்வதேச பிரகடனத்துக்கான அரசதரப்பு பிரதிநிதிகள் குழுக்களின் ஏழாவது மாநாட்டிலேயே இலங்கைத் தூதுவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்யும் பிரகடன மாநாட்டில் கலந்து கொண்டு வருகிறது.

விரைவில் இந்த பிரகடனத்தில் கையெழுத்திடுவதாக இலங்கை உறுதியளித்திருப்பதை, கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்வதற்கும், கண்ணிவெடிகளைத் தடை செய்வதற்கும் ஆதரவாக பரப்புரைகளை மேற்கொள்ளும் நாடுகளும் அமைப்புகளும் வரவேற்றுள்ளன.

இலங்கை கொத்தணிக் குண்டுகளை உற்பத்தி செய்வதோ ஏற்றுமதி செய்வதோ இல்லை என்ற போதிலும், இறுதிக்கட்டப் போரில் கொத்தணிக் குண்டுகளைப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,செப்.07

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளி காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் - கரிக்கட்டுக்குளத்திலும்

வவுனியா பிரதேசத்தில் -

வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மடுக்கரை பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# பெண்கள் போலி (ஆ)சாமிகளை எளிதில் நம்புவது ஏன்?

மதுமிதா



கடவுள் இருக்கிறாரா...? இல்லையா? என்கிறதத்து வார்த்தச் சண்டைகளும் தர்க்கங்களும் ஒருபுறம் இருக்கட்டும். 'இருக்கிறார்' என்று நம்புகிறவர்களுக்குள் மண்ணைப் பிடித்து கடவுள் என்பதற்கும் 'சாதாரண மனிதனையும்' அதே இடத்தில் நிறுத்தி, அவனையும் கடவுள் என்று நம்புவதற்குமானப் புரிதலின் சிக்கல்தான் பெண்களின் மீதான போலி (ஆ)சாமிகளின் பாலியல் பிரச்சினைகளைத் தொடரச் செய்கிறது.

மதப் பாகுபாடுகள் எல்லாம் இல்லாமல், பெரும்பான்மையான மதங்களில் குரு ஸ்தானத்தில் இருந்து கொண்டு, கடவுளின் அவதாரமாகத் தங்களை புரொமோட் செய்தபடி, லெவிடேட் (Levitate) செய்வதாக ஏமாற்றி, பலர் எலிவேட் (Elevate) ஆகிவிடுகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் தவறாமல், குறிப்பிடத் தகுந்த எண்ணிக்கையில் தலைப்புச் செய்திகளாக இவை வந்தாலும், நின்றபாடாக இல்லை.

**பெண்கள்தான் இவ்வுலகின் கவனவீர்ப்பு விசை**

இதில் ஆண்கள், தொழிலதிபர்கள், நம்பிக்கை மிகுந்த பக்தர்கள், அரசியல்வாதிகள், முதலீட்டாளர்கள்... என எத்தனையோ பேர் பலி ஆடுகளாக ஏமாற்றப்பட்டு இருப்பார்கள். ஆனால், இதில் சிக்கிக்கொள்ளும் பெண்கள் மட்டுமே ஊடகங்களுக்குப் பிரதானம்.

பெண்மையைப் பிரதானப்படுத்தினால் மட்டுமே பல நிகழ்வுகளைச் சுடச்சுடவோ, சுவாரஸ்யமாகவோ கொண்டு செல்ல முடிவதாகப் பெரும்பான்மையான ஊடகங்கள் நம்புகின்றன. பல நேரங்களில் அது அப்படியே நிரூபணமும் ஆகிறது. காரணம், இன்றும் என்றும் பெண்தான் இவ்வுலகின் கவனவீர்ப்பு விசை.

நிதமும் எங்கோ ஒரு மூலையில் வன்முறைக்குள்ளாகும் பெண் குழந்தைகள், விஷ்ணுப் பிரியா, நந்தினி போன்ற பெண்கள் மீதான பாலியல் வெறித்தனங்கள் அரங்கேறியமையை அறியும்போது நமக்கு ஏற்படும் இன்ஸ்டன்ட் கொந்தளிப்பும் பதற்றமும் ஒருபுறமிருக்க, இது போன்ற போலி ஆசாமிகளை நம்பிச் செல்லும் பெண்களைப் பார்க்கும் போது, அது வேறு மாதிரியான மன உணர்வையே பொதுப்புத்தியாக வெளிப்படுத்துகிறது.

**புரிதல் இருந்தால் மட்டுமே...!**

உளவியல்ரீதியிலான பகுப் பாய்வில், 'இதுபோன்ற போலி ஆசாமிகளின் சர்ச்சையில் சிக்கிக்கொள்ளும் அல்லது அப்படிப்பட்ட ஆசாமிகளின் வளர்ச்சிக்கும், அவர்கள் முன்வைக்கும் இளைப்பாறுதலுக்கான கருத்துக்கும் இதுவரை 'ஆம்' போட்டவர்களில், பெண்களுக்கென என்ன ஒரு தனி உளவியல் இருந்துவிடப் போகிறது?' எனத் தோன்றினாலும், அது வெகு ஜனத் துக்குப் புரியவேண்டும். அந்தப் புரிதல் இருந்தால் மட்டுமே உண்மையான பிரச்சினை எதுவெனக் கவனம் மாறும். இல்லையேல், வெறும் பக்தைகளான பெண்களை டீஸ் செய்யும் இன்னொரு நிகழ்வாகவும் இது நீர்த்துப்போகும்.

அது நீர்த் துப்போகும்போது செய்திக்கான வேறொரு காரணம் மற்றும் வேறு சில பெண்கள் என அப்போது அடுத்தகட்ட செய்தியாக மட்டுமே உணர்வுகள் ட்யூன் செய்யப் படும்.

எனவே, செய்திகளைவிட அதற்குப் பின்னான தேடல் 'தனி ஒருவன்' போல உளவியலை உள்நோக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது இன்றைய பிரச்சினைகளின் தேவையடுக்கில் பதுங்கியுள்ளது என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**பெண்களின் தவறான நம்பிக்கையால்...!**

அடிக்கடி போலி 'ஆசாமி'யை நம்பி பாலியல் பிரச்சினைக்குள்ளாகும் பல செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. ஆனாலும் தொடர்ந்து அப்படியான இடங்களில் சிக்கிக்கொள்ளும் இப்பெண்கள் என்ன தனித் தீவில் வளர்க்கப்பட்டவர்களா அல்லது இதற்கு முன்னான இப்படியான நிகழ்வு பற்றி கேள்வியுறாதவர்களா எனப் பார்த்தால், இல்லை. ஆக, இவர்கள் வெகு சகஜமாக எங்கும் பரவியிருக்கும் ஒருமித்த மனநிலை உடைய பெண்கள் கூட்டம் மட்டுமே. மீண்டும் மீண்டும் இந்தச் சமூகத்தில் ஒவ்வொரு பிரச்சினையையும் பொது உளவியல் (Common psychology) கொண்டு பார்க்க வேண்டிய அவசியம் இருப்பதை அழுத்தமாக உணர முடிகிறது.

தன் சுயத்தை அறியாமல், எதையும் ஆராய்ந்து பார்க்காமல், பகுத்தறிவையும் உள்ளுணர்வையும்கூடக் கவனிக்காமல், எப்போதும் பிறரைச் சார்ந்து வாழும் தன்மைகொண்ட எந்தப் பெண்ணுக் கும் இந்தக் கதி நிகழலாம் என்ற உளவியல்தான் இவற்றைத் தைரிய மாகச்செய்யும் ஆசாமிகளுக்குச் சாத கமாக நகர்த்திச் செல்கிறது என்பேன். அவர்கள் தொடர்ந்து சிரித்த படி, நிழற்படங்களுக்கு போஸ் கொடுத்துக்கொண்டே நகர்ந்தும் செல்கிறார்கள்.

யோசிக்கக் கடினம்தான். ஆனாலும், வாழ்வதற்கான தேவைகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் ஒரு சாதாரண பெண்ணுக்கும், உலக வாழ்வைத் தாண்டி எங்கேயோ சிந்திப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கும் இந்த ஆசாமிகளுக்குமான Bridging factor எது எனப் பார்த்தால், அது பெண்கள் மனதில் பதிந்திருந்தும் Dependency எனும் சார்பின் ஒரு தீவிரம் எனலாம்.

ஆதிச் சமூகத்திலிருந்து பரிணமித்து, ஆண் தலைமை ஏற்ற காலத்திலிருந்து, பெண் ஏதோ ஒன்றைச் சார்ந்து வாழ்பவளாகவே பழக்கப் படுத்தப்பட்டிருக்கிறாள். அந்த Dependency! ஒரு காலகட்டம் வரை பெற்றோர், பின்னர் கணவன், அதன் பின்னர் பிள்ளைகள்... எனத் தன் வாழ்வை ஓர் ஒட்டுண்ணியாகவே சார்புநிலையில் வாழப் பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறாள். ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு வர்க்கக் குடும்பத்திலும் வெவ்வேறுவிதமான Dependency ஐ மையப்படுத்தி இது நகர்கிறது எனலாம்.


**ஆணின் நிலை வேறு**

'ஆண் அப்படியில்லையா?' எனக் கேட்டால், ஆண் என்பவன் பொருளீட்டவும், நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் ஆரம்பம் முதலே தனக்கான தேவைகளை நோக்கித் தன்னையும், தன் சூழலையும் பழக்கப் படுத்திப் பழகியவன். இன்றைய ஆண், பெண் என்பவர்கள் நேரடியான ஆதாம், ஏவாள் அல்லர்! வழி வழியாக வரும் ஆண், பெண் பதிவுகளின் தொடர்கதைகள்.

மாறிவரும் காலகட்டத்தில் குடும்ப அமைப்புகள் எல்லாம் சிதறிக் கொண்டிருந்தாலும், பெண் என்பவளுக்குக் குடும்பம் என்ற சார்பு நிலை (Dependency) இல்லாமல் போனாலும் கூட, வேறு ஏதோ ஒரு சார்பை உருவாக்கியபடியே அவள் வாழ்ந்து கொண்டிருப்பாள். அது அவளுக்கான தொழிலோ, சேவையோ... ஏதோ ஒரு வகையில் வாழ்வதற்கானத் தேவைகளை உருவாக்கி அந்தத் தேவைகளைச் சார்ந்து வாழப் பழக்கப்பட்டிருக்கிறாள். அதை வாழ்க்கைக்கான பிடிப்பு என்றும் அவள் நம்பிக்கொண்டிருக்கிறாள்.

குடும்பமோ, தொழிலோ... பெண் எப்போதுமே வாழ்க்கையின் அடுத்த அடுத்த கட்டங்களை யோசித்தே வாழ்ந்துவருவதை உணரலாம். அதனால்தான் ஆண் என்பவன் பொருள் ஈட்டுபவனாகவும், பெண் என்பவள் குடும்பத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் காரணியாகவும் உருவாக்கம் பெற்றிருந்தார்கள். காலப் போக்கில் எல்லா வித்தியாசங்களும் உடைகின்றன என்று சொல்லிக்கொண்டாலும், பெரும்பாலும் பெண்கள் வேலைக்குச் செல்வது என்பதிலும், கூடுதல் சுமையுடன் அதே Dependancy இல் வாழ்பவர்கள்தான் அவர்களில் ஏராளம்.

கணவனோ, பிள்ளையோ அவர்களின் ஒவ்வொரு கட்டத்திலும் தன் இருப்பையும் சார்பையும் உறுதிப் படுத்தியபடியே பெண் வாழ்க்கை கட்டமைத்துக்கொள்ளப்படுகிறது. தெளிவான எண்ண ஓட்டம் இருக்கும் வரை இது சரியாகவே அமைகிறது. ஆனால், சார்பு நிலையின் பிடியில், தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் அடையாளப் படுத்திக் கொள்ள சமுதாயத்தின் முன் அவள் எடுக்கும் முனைப்பும் ஆர்வமும் அவர்களின் தேவைகளைத் தாண்டி சிந்திக்கவும், பல நேரங்களில் அதை நம்மை மீறிய இறை சக்தியிடம் மண்டியிட்டுப் பெறவும் உந்தித் தள்ளுகிறது.



## உளவியல் சொல்வது என்ன?

இன்றளவும் ஆடி மாதத்தில் கூழ் ஊற்றுவது, தீ மிதிப்பது, பிற மதங்களின் நோன்பு முறைகள்... என அனைத்திலும் பெண் என்பவள் தன் தேவைகளைச் சார்ந்து முன்னேற்றிக்கொள்ளும் இன்னொரு சக்தியை துணைக்கு அழைக்கிறாள். மற்றொரு பக்கம் நவீன யோகப் பயிற்சி, வாழ்வியல் பயிற்சி, முக்தி பெற பயிற்சி... என்று ஒரு கம்புனுக்குள் அவளுக்கு இடம் கிடைக்கிறது.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**ட்ரம்பின் எதேச்சதிகாரக் கண்ணோட்டம் மட்டுமல்ல, மாறாக அவர் ஆளுருவாக விளங்கும் நிதியியல் தன்னலக் குழுக்களும் ஆதரிக்கும் கண்ணோட்டமும் வெளிப்படுவது, ஆளும் வர்க்கத்தின் மையத்தில் நிலவும் அரசியல் நெருக்கடியிலிருந்து வருகிறது.**



இருந்தபோதினும், சார்லட்வில் சம்பவங்களும் அதற்கு வெள்ளை மாளிகையின் விடையிறுப்பும், அமெரிக்காவிலும் மற்றும் சர்வதேச அளவிலும் உள்ள தொழிலாள வர்க்கத்தால் ஒரு கூர்மையான எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இரு கட்சிகளுக்கும் மற்றும் ஒட்டுமொத்த அரசியல் ஸ்தாபகத்திற்கும் எதிராகத் தொழிலாள வர்க்கத்தின் ஒரு பெரிய சுயாதீனமான இயக்கம் இல்லாமல் இருப்பது தான், அமெரிக்காவில் பாசிசவாதம் வளர்வதற்கான ஒரு நிஜமான அபாயமாக உள்ளது.

ட்ரம்பின் எதேச்சதிகாரக் கண்ணோட்டம் மட்டுமல்ல, மாறாக அவர்




ஆளுருவாக விளங்கும் நிதியியல் தன்னலக் குழுக்களும் ஆதரிக்கும் கண்ணோட்டமும் வெளிப்படுவது, ஆளும் வர்க்கத்தின் மையத்தில் நிலவும் அரசியல் நெருக்கடியிலிருந்து வருகிறது. ட்ரம்பின் மூலோபாய மற்றும் கொள்கை கலந்தாய்வுக் குழுவிலிருந்தும் (Strategic and Policy Form) மற்றும் அவரது Manufacturing Council இல் இருந்தும் இராஜினாமா செய்யும் தலைமை செயலதிகாரிகளின் பட்டியல் அதிகரித்து வந்தமை, அவ்விரு குழுக்களையும் ஜனாதிபதி கேலைக்க இட்டுச் சென்றது. ஜனநாயக கட்சி மற்றும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னணி காங்கிரஸ் உறுப்பினர்கள், ஜனாதிபதியை மற்றும் அவர் கருத்துக்களைக் கண்டித்துள்ளனர். முன்னாள் ஜனாதி பதிகள் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் மற்றும் ஜோர்ஜ் எச். டபிள்யூ. புஷ், அத்துடன் இராணுவத் தலைமை தளபதி அலுவல கத்தின் நான்கு உறுப்பினர்களும் இனவாதத்தை எதிர்த்து அறிக்கைகள் வெளியிட்டனர்.

சித்திரவதை திட்டங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு அமைப்பின் உளவு வேலைகளை நடைமுறைப் படுத்த உதவிய முன்னாள் சிஐஏ இயக்குநர் ஜோன் பிரென்னென், ட்ரம்பின் கருத்துக்களை ஒரு ''தேசிய அவமதிப்பாகவும்'', அது ''நமது தேசிய பாதுகாப்பையும் நமது கூட்டு முன்பேர உடன்படிக்கைகளையும் படுமோசமான ஆபத்திற்கு'' உட்படுத்தும் என்றும் குறிப்பிட்டார்.

ஆளும் வர்க்கத்தின் இந்த பிரதிநிதிகளது நடவடிக்கைகளும் அறிக்கைகளும், ட்ரம்பின் பாசிசவாத சிந்தனை போக்கு ஏதோ தெளிவாக ஸ்தாபிக்கப்படாததைப் போல! பாசாங்குத்தனம் மற்றும் மூடிமறைப்பின் ஒரு நடைமுறையை உள்ளடக்கி உள்ளன. பல செய்திகளின்படி, ட்ரம்ப் அவரது பாசிசவாத-சார்பு கண்ணோட்டங்களைப் பல சந்தர்ப்பங்களில் அவரின் உயர்மட்ட ஆலோசகர்களிடம் வெளிப்படுத்தி இருந்தார். இதன் அர்த்தம், வொஷிங்டன் முழுவதிலும் மற்றும் ஊடகங்களிலும் அவை குறித்து நன்கு தெரியும், ஆனால் அவர்கள் பொதுமக்களிடம் இருந்து அவற்றை மறைக்க முயன்றனர்.

புதனன்று (16.08.2017) நியூ யோர்க் டைம்ஸ் வலைத் தளத்தில், (''ட்ரம்ப் பாரம்பரியத்தைக் கைவிட்டு, ஒரு தார்மீக தரமுறைகளை அமைக்க மறுக்கிறார் என்று தலைப்பிட்டு) பிரசுரிக்கப்பட்ட மார்க் லான்டரின் ஒரு கட்டுரை, ஆளும் வர்க்கத்தை உந்திக் கொண்டிருக்கும் நிஜமான கவலைகளை வரையறுக்கிறது. ரூஸ் வெல்ட் இல் இருந்து ரீகன் வரையில் ஜனாதிபதிகள் எதை அவர்கள் வேலையின் ஒரு முக்கிய கடமையாகக் கருதினார்களோ, அதாவது தேசத்திற்கான ஒரு தார்மீக போக்கை அமைப்பதை ''ட்ரம்ப் ''அதை கைவிட்டுள்ளதாக'' லான்டர் குறைகூறுகிறார்.

1989 இல் ரீகனின் விடைபெறும் உரை மற்றும் செப்ரெம்பர் 11, 2001 தாக்குதல்களை தொடர்ந்து ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் காங்கிரஸிற்கு வழங்கிய உரை மற்றும் ''இதயத்தை உருக்கும் பொலிஸ் துப்பாக்கிச் சூடுகள் மற்றும் இனரீதியில் உந்தப்பட்ட படுகொலைகளின் பின்னர் அமெரிக்கர்கள் சிறப்பானதைச் செய்ய'' பராக் ஒபாமாவின் அழைப்பு ஆகியவற்றை, லான்டர், முந்தைய ஜனாதிபதிகளால் அமைக்கப்பட்ட ''தார்மீக தரமுறைகளுக்கு'' எடுத்துக்காட்டுகளாக மேற்கோளிடுகிறார். மற்ற ஜனாதிபதிகளுக்கு ''தார்மீக குறைபாடுகள்'' இருந்த போதும், இதுவரையில் எந்தவொரு ஜனாதிபதியும் தார்மீகத் தலைமையின் கருத்துருவை நிராகரித்ததில்லை, என்று கூறி லான்டர் நிறைவு செய்கிறார்.



இக்கருத்தின்படி, அமெரிக்க சமூகத்தின் மற்றும் அரசியலின் அனைத்து பிரச்சினைகளும் ட்ரம்பினது தனிப்பட்ட தோல்விகளில் இருந்து வந்துள்ளன என்றாகிறது. இதை நியூயோர்க் ரைம்ஸ் அதன் புதன்கிழமை தலையங்கத்தில் சுருக்கமாக மற்றும் அருவருக்கத்தக்க வகையில் முன்வைக்கிறது. பிரச்சினையின் மூலவேர், படையினர் கிடையாது. அது உயர்மட்டத்தில் இருக்கும் ஒரு நபராவார்.

ஆனால், அவரது ஏமாற்றும் தனிப்பட்ட சகல தனிமனித பண்புகளைப் பொறுத்தவரையில், ட்ரம்ப், ஒரு நீண்ட அரசியல் பரிணாமத்தின் விளைவாக உள்ளார். கடந்த அரை-நூற்றாண்டு ஒரு மலைப்பூட்டும் அரசியல் வீழ்ச்சியினதும் சிதைவினதும் நிகழ்வுபோக்கைக் கண்டுள்ளது. இவை டைம்ஸ் மேற்கோளிடும் அந்த ''தார்மீக வழிகாட்டிகளின்'' மேற்பார்வையில் தான் நடந்தன.

**ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு திருப்புமுனையாகும். பரந்த மக்கள் பிரிவுகளிடையே அதிக ரித்து வரும் விரக்தி மற்றும் அன் னியப்படலுக்கு முறையிடும் ஒரு பாசிசவாத இயக்கத்தின் அபிவிருத் தியை ஊக்குவிப்பதற்கும் சட்ட பூர்வமாக்குவதற்கும் அவர் முயன்று வருகிறார்.**

உலகெங்கிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் குற்றகரமான நடவடிக்கைகள் அம்பலமானதற்கு இடையே, வாட்டர்கேட் மோசடிக்காக நிக்சன் பதவியில் இருந்து கீழிறக்கப்பட்டார். கார்டர் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க பினாமி போரைத் தொடங்கினார். அது அல் குவைதா உருவாவதற்கு இட்டுச் சென்றது.




வெள்ளை மாளிகையின் அடித்தளத்திலிருந்து செயல் படுத்தப்பட்ட ஒரு குளறுபடியான சட்டவிரோத மற்றும் இரகசிய போருக்கு நிக்கரகுவாவில் ரீகன் தலைமை தாங்கிய அதே வேளையில் அவர் ஒரு சமூக எதிர்ப்புரட்சியையும் தொடங்கினார்.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர்
Kalaikkathir





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



88



## அத்தியாயம் - VI

## ஆக்கிரமிப்பு இராணுவம்

அன்றைய அமர்விலும் அதன் பின்னரும், பங்குபற்றப்போகும் நான்கு அமைச்சர்களை அவர் அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின்னர் விவாதிக்கப்படும் விடயங்களுக்குப் பொருத்தமாக, வேறு அமைச்சர்களும் புதிதாகச் சேர்ந்துகொள்வர் என்றும் கூறினர். அரச அணியை வழிநடத்தும் பிரதான பேச்சாளராக, அப்போது உயர்கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றுக்கு அமைச்சராக இருந்த ஏ.சீ.எஸ். ஹமீது அவர்களை அரசுத் தலைவர் நியமித்தார். ஹமீது அவர்கள், முன்னாளில் ஜெயவர்த்தனா அரசின் வெளியுறவு அமைச்சராகத் திகழ்ந்தவர். அரச அணியில் நியமிக்கப்பட்ட ஏனைய அமைச்சர்களில், வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, வீடமைப்பு நிர்மாண அமைச்சர் சிறிசேன கூரே ஆகியோரும் சேர்க்கப்பட்டனர். இரண்டு அணிகளும் மனம்திறந்து கலந்துரையாட வேண்டும் என்று அறிவுரை கூறிய பிரேமதாசா அவர்கள், விவாதத்தைத் தவிர்த்துக் கொண்டு சரியான பேச்சை நடத்துமாறும் ஆலோசனை வழங்கினார்.



கலந்தாலோசித்தல், சமரசம், கருத்தொருமிப்பு என்ற தமது முத்தத்துவத்தை விளக்கிய பின், ஹில்டன் விடுதிக்குச் சென்று கலந்துரையாடலைத் தொடர இரண்டு அணிகளையும் அவர் பணித்தார். அமைச்சர்கள் அணியுடனும், அரசுத் தலைவருடன் தனியாகவும் பலசுற்றுப் பேச்சுகளை நடத்தினோம். எல்லாமாக ஒன்பது அமர்வுகள் 1989 மே 4 இல் இருந்து மே 30 வரை நடைபெற்றன. அமச்சரணியுடன் நாம் நடத்திய அமர்வுகளின் போது, தமிழர் தாயகம் மீது இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பற்றியும் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் அட்டூழியங்கள் பற்றியும் குறிப்பாகக் கவனம் செலுத்தினோம். புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இவை முக்கியமான வாழ்வா சாவா என்ற பிரச்சினைகளாகும். இந்திய அமைதிப்படையினரின் ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி, இந்திய இராணுவத் தலையீட்டை அனத்துலகக் கவனத்துக்குக் கொண்டுவர நாம் திட்டமிட்டோம். நெருக்கடி நிறைந்த இலங்கைத் தீவில் அமைதி பேணும் அற்புதமான பணியை இந்தியப் படைகள் புரிந்து கொண்டிருக்கின்றன என அனைத்துலக சமுதாயம் நம்பும் வகையில் ஒரு மாயை உருவாக்கப்பட்டிருந்தது. இந்திய அரசின் பலம் வாய்ந்த பரப்புரைப் பொறிமுறையையும் உலகம் பூராகவும் அதற்கிருந்த இராஜதந்திர வலைப் பின்னலையும் தாக்கும் வல்லமை எம்மிடம் முன்னர் இருக்கவில்லை. இப்பொழுது அமைதிப் பேச்சு கொழும்பிலே தொடங்கப்பட்டு எமது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்ட பிரேமதாசா அவர்களுடைய புதிய நிர்வாகத்தின் ஆதரவு எமக்குக் கிடைத்த நிலையில், எமது கருத்தை வெளிப்படையாகக் கூறவும், உண்மையைப் புட்டுக்காட்டவும் எமக்கு இப்பொழுதுதான் ஒரு தளம் கிடைத்தது. சிறிலங்கா அமைச்சரணியுடன் முதற் சுற்றுப் பேச்சு அமர்வுகள் நடைபெறும் போது, விடுதலைப் புலி அணியின் தலைவர் என்ற நிலையில், பாலா வடக்குக் கிழக்கில் நடைபெறும் இந்திய இராணுவ ஆட்சி தொடர்பாகத் தமிழ் மக்களின் கருத்து விதானத்தை வெளியிட்டார்.

இலங்கை வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர் தாயகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்தியப் படையை அமைதி காக்கும் படை என்று வகைப்படுத்தக் கூடாது என்றும் ஆக்கிரமிப்பு இராணுவமாகக் கணிக்கவேண்டும் என்றும் அவர் தமது வாதத்தில் முதன்மைப் படுத்தியிருந்தார். இந்தச் சந்திப்புகளின் போது நான் எடுத்த குறிப்புகளில் இருந்து பாலா முன்வைத்த வாதங்களைப் பின்வருமாறு தொகுப்பேன்:-

அமைதி காக்கும் நடவடிக்கை என்ன என்பது தொடர்பாகத் தெளிவான ஐ.நா. கருத்துருவாக்கம் ஒன்று உள்ளது. முரன்பாட்டு மோதல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், அமைதியை முன்னெடுப்பது தொடர்பாகவும், அனைத்துலக மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களும் தரங்களும் உள்ளன. அமைதி காக்கும் ஓர் இராணுவம், முரண்பாடு மோதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு அல்லது கூடுதலான பிரிவுகளுக்கு இடையே பக்கம் சாராது நிற்பது முக்கியமானது. அமைதி காக்கும் நடவடிக்கையின் முக்கிய பணி என்னவென்றால், மோதல் இடம்பெறும் பகுதிகளில் அமைதியைப் பேண அல்லது மீள நிறுவ உதவுவது. அமைதி காக்கும் நடவடிக்கை என்பது மோதலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடாகும். ஐ.நா. மரபிலே பார்த்தால், அமைதிப் படை, மோதல் நிலை விரிவடையாது தடுத்து, அமைதிக்கான சுமுகச் சூழலை ஏற்படுத்த ஆணை பெற்று இயங்குவது. அமைதி நடவடிக்கையிலே ஈடுபடும் இராணுவ உறுப்பினர்களுக்கு வலிந்து திணிக்கும் அதிகாரம் எதுவும் வழங்கப்படுவதில்லை. தற்காப்புத் தவிர்ந்த வேறு எதற்கும் இராணுவ உறுப்பினர்கள் ஆயுத பலத்தைப் பயன்படுத்த அதிகாரம் வழங்கப்படுவதில்லை. அத்துடன், இலகுவான பாதுகாப்பு ஆயுதங்களை மட்டுமே அவர்கள் தரித்திருப்பார்கள். போராட்டத்தில் சம்பந்தப்படுத்தப்பட்ட தரப்பினரின் இராணுவச் சமநிலை, பாதிக்கப்படும் வகையில் அமைதிப்படை நடந்துகொள்ளக் கூடாது. இவையே அமைதி காப்புச் செயற்பாட்டை வழிநடத்தும் அடிப்படை வழிமுறைகளும் கோட்பாடுகளுமாகும். அனைதுலக மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள் இவை. இந்த வழிமுறைகளுக்கும் நியமங்களுக்கும் அமைவாக அமைதிப்படைத் தகைமையைப் பெற இந்திய இராணுவம் அருகதையுடையதல்ல. தொடக்கத்தில், இந்திய - இலங்கை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாகவே, இந்திய இராணுவப் பிரிவு ஒன்று இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் இடையே நடக்கும் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதை மேற்பார்வை செய்வதும், அமைதியைப் பேணுவதுமே அதன் பணியாக இருந்தது. ஆனால், விரைவிலேயே இந்திய இராணுவம் முற்றிலும் வேறுபாடாக பங்காற்றத் தொடங்கியது. போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு பிரிவினருடன், அதாவது, விடுதலைப் புலிகளுடன் ஆயுதபாணிகளாக விரைவிலேயே மோதத் தொடங்கியது. ஆயுத மோதல், ஆயுதங்களைக் களையும் முயற்சியாகவே முதலில் கருதப்பட்ட போதிலும், விரைவில் இந்தியப் படைகளுக்கும் புலிக் கெரில்லாப் படையினருக்கும் இடையே முழுமையான போராக வடிவெடுத்தது. கடந்த 20 மாதங்களாகத் தணிவு எதுவும் இன்றிப் போர் நடந்து கொண்டிருப்பதோடு, போரில் ஈடுபட்டிருப்பவர்கள் இந்தியப் படையினரும் விடுதலைப் புலிகளுமே.

நடுநிலை நின்று அமைதி காக்க மத்தியஸ்தம் செய்ய வேண்டியவர்கள் தாமே நேரடியாக இராணுவ மோதலில் ஈடுபட்டிருந்தமையால், இந்திய அமைதி காக்கும் முயற்சியின் தன்மையே கேள்விக்கு உரியதாகிவிட்டது. இந்திய இராணுவத் தலையீடும் அதன் தாக்குதல் நடவடிக்கைகளும், அமைதி காக்கும் நடைமுறை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் அனைத்து நியமங்களையும் மீறிவிட்டன. தமிழ்ப் பகுதிகளில் செயலாற்றிக் கொண்டிருக்கும் இந்தியப் படையை இனிமேலும் பக்கஞ்சாராப் படை என்று கொள்ள முடியாது. அது போரைக் கட்டுப்படுத்தவுமில்லை; அமைதியைப் பேணவும் இல்லை. போராட்டம் தீவிரமடைவதைத் தடுப்பதற்குப் பதிலாக, இந்தியப் படைகள் வன்செயலையும் போரையும் தீவிரப் படுத்தியிருக்கின்றன. இந்திய இராணுவம், தான்தோன்றித்தனமாக ஆட்சி அதிகாரங்களைச் சுவீகரித்துக் கொண்டு, இந்த நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் நேரடியாகத் தலையிட்டிருக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் பிரசன்னமாகி இருக்கும் இந்தியப் படை அமைதி காக்கும் படையல்ல. மாறாக, ஆக்கிரமிப்பு இராணுவமே என்பது விடுதலைப் புலிகளின் தீர்க்கமான முடிவாகும்.

(தொடரும்...)











''எமதுசமூகத்தை,எமது இனத்தை, எமது கலை, கலாசாரத்தைச் சீரழிக்க முயலும் பிறசக்திகளால் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையும் நாம் இனங்கண்டு, அவற்றுக்கு அடிமைகள் ஆகாமல் நல்லதோர் ஆரோக்கியமான, அன்புறவுள்ள ஒரு சமூகமாக வாழவும், ஏனையவர்களுக்கு உதவுகின்றவர்களாக சமூக,மத,பேதமின்றி நாம் அனைவரும் தமிழர்கள் என்ற ஒரே உணர்வுடன் ஒருவரைஒருவர் புரிந்து கொண்டு, விட்டுக்கொடுத்து, தாங்கி வாழவேண்டும்.''

ஊர்காவற்றுறை புனித மரியன்னை ஆலயத்தில் தீவக மறைக் கோட்டகுரு முதல்வரும் மண்ண டதீவு-அல்லைப்பிட்டி பங்குத் தந்தையுமாகிய அருட்பணி மனுவேற் பிள்ளை டேவிட் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற தீவகமறைக்கோட்ட தூய யோசேவாஸ் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் விருந்தினர் களுக்கு மாலை அணிவித்து மதிப்பளிக்கப்படுவதையும், விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றுவதையும், அவர்கள் உரையாற்றுவ தையும், திருக்குடும்ப அருட்சகோதரிகள் ஆரம்ப செபம் செய்வதையும், யாழ். ஊர்காவற்றுறை புனிதமரியாள் றோ.க. மகளிர் வித்தியாலய மாணவிகளின் வர வேற்பு நடனத்தையும், புங்குடுதீவு பங்குத் தந்தை அருட்பணி செப ஜீவன் நன்றியுரை வழங்குகின்றமையையும், ''மறைகாத்தமா வீரன்'' நாட்டுக்கூத்தின் சில காட்சிகளையும் படங்களில் காணலாம். (இ)



யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் ஹஜ் பெருநாள் தொழுகையும் ஜும்மா பிரசங்கமும் யாழ். அனைத்துப் பள்ளி வாசல்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது. மௌலவி அப்துல் அஸீஸ் தொழுகையும் நடத்தி இருந்தார். (இ-19)



முஸ்லிம் மக்கள் தங்கள் ஹஜ் பெருநாளைக் கொண்டாடிய போது மன்னார் மூர் வீதி பெரிய ஜும்மா பள்ளி வாசலில் பெருநாள் தொழுகையின் போது அகில இலங்கை ஜம் இய்யத்துல உலமா மன்னார் மாவட்ட இணைத் தலைவரும் மன்னார் மூர் வீதி பெரிய பள்ளிவாசல் மௌலவியுமான எஸ்.ஏ.அசீம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற போது...! (இ-112)

# சட்டமா அதிபர் ஜயசூரியாவுடன் பிரதமர் அவசர ஆலோசனை!

கொழும்பு, செப். 07

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைபில் சில திருத்தங்களை அவசரமாக மேற்கொள்வது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய வுடன் தீவிர ஆலோசனை நடத்தியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவுக்கும் சட்டமா அதிபருக்கு மிடையில் நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் இந்த விசேட சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்த விசேட கலந்துரை யாடலின் போது, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் சார் பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந் திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்பட மேலும் சில பிரமுகர்கள் கலந்து கொண் டனர்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட் டுள்ளஇழுபறிநிலைகுறித்தும் அதில் திருத்தங்களை ஏற் படுத்துவதற்காக முன்னெடுக் கப்பட வேண்டிய சட்ட ஏற் பாடுகள் பற்றியும் இதன் போது விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

மாகாண சபைகளைக் கலைக் கும் அதிகாரத்தை நாடாளு மன்றத்துக்கு வழங்கும் வகை யிலும், சகல மாகாண சபை களுக்கும் ஒரே நாளில் தேர் தலை நடத்துவதற்கு வழி வகுக்கும் 20 ஆவது திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்டதை யடுத்து, மாகாண சபைகளின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மேற்படி சட்டமூலம் மாகாண சபை களில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஊவா, தென் ஆகிய மாகாண சபைகள் இதை நிராகரித் துள்ளன. மேல், சப்ரகமுவ மாகாண சபைகளிலும் பெரும் இழுபறிக்குபின்னர்வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளும் போர்க்கொடி தூக்கியிருந்தன. இதையடுத்தே 20ஆவது திருத்தச் சட்டத் தில் சில திருத்தங்களைச் செய் வதற்கு அரசு தீர்மானித்தது. இது பற்றியே சட்டமா அதிப ரிடம் ஆலோசனை பெறப்பட் டுள்ளது.

இதன்படி திருத்தங்களை உள்ளடக்கிய புதிய சட்டமூலம் மாகாணசபைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இதன் காரணமாகவே 20 மீதான விவாதத்தை வடக்கு, கிழக்கு, மேல் ஆகிய மாகாண சபைகள் இன்றுவரை ஒத்திவைத்துள் ளன என்பது குறிப்பிடத்தக் கது.

அரசின் உத்தேச சட்டமூலத் தின் பிரகாரம், நாடாளுமன்றம் ஒரு திகதியைத் தீர்மானிக்கும் பட்சத்தில், அதற்கு முன்னர் ஆயுட்காலம் முடிவடையும் மாகாண சபைகளின் பதவிக் காலம் தாமாகவே நீடிக்கப் படும்.

அத்துடன், 2019 வரை தேர்தலை பிற்போடுவதற்கு வழிவகுக்கும் ஏற்பாடும் இருக்கின்றது. இதற்குத்தான் மாகாண சபைகள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

எனவேதான், 2018ஆம் ஆண்டுக்குள் சகல மாகாண சபைகளுக்கும் புதிய முறை யில் தேர்தல் நடத்தப்படும் என்ற உத்தரவாதத்துடன் திருத்தியமைக்கப்பட்ட சட்ட மூலம் அனுப்பி வைக்கப்பட உள்ளது என அரச வட்டாரங் களிலிருந்து அறிய முடிகின் றது.

மாகாண சபைகள் ஒத்தி வைக்கப்பட்டால் அதன் பின் னர் நாடாளுமன்றத்தின் வகி பாகம் என்ன? மாகாண சபை களின் அதிகாரங்கள் என்ன? என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது என்று குறித்த சந்திப்பில் கலந்து கொண்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்துள் ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## பெண்கள் போலி...

(09 ஆம் பக்கப் தொடர்ச்சி...)

### குடும்பத்தில் அழுத்தம் அதனால் பெண்கள்...!

தன் குடும்பத்தில் Dependency-யால் மனஅழுத்தம் கொண்ட பெண் மட்டுமே இந்த இரண்டிலும் மிக எளிமையாக வீழ்த்தப்படுகி றாள்.

போலி ஆசாமிகளுக்கு Testin monials தரும் நம்மவர்களாலும், சில மேலைநாட்டு பக்தர் களாலும் மனபலம் கிடைப்பதாக நம்பிச் சேரும் பலரும், இயல்பாக நிகழும் பல மாற்றங் களைக்கூட பெரும்பாலும் இதனுடன் தொடர்பு படுத்தி, 'தன் செயலுக்குத்தான் மட்டுமே காரணம்' என்பதைப் பல இடங்களில் மறக்கத் தொடங்குகிறார்கள். பின்னர் மறைக்கத் தொடங்கவேண்டியிருக்கிறது.

இப்போதும் இந்த நிலையில் பெண்ணின் சார்புத்தன்மை குறையவில்லை. மாறாக, இடம் மாறுகிறது. இங்கே கடவுளெனக் காத்திருப் பவர்கள் மூர்க்கமானவர்களாக இருக்கிறார்கள். பெண்ணோ, Dependency எனும் தீவிரத்தில் சுயசிந்தனையை இழந்திருக்கிறாள்.

ஆரம்பத்தில் இந்த Dependency என்பது மன நிம்மதிக்கான விஷயமாக அமைந்தாலும், ஒவ்வொரு கட்டத்திலும் தன் பலம் பற்றிய எல்லாச் சிந்தனைகளையும் தவிர்த்துவிட்டு, முற்றிலும் தன்னை மீறிய ஏதோ ஒன்றால் மட்டுமே எல்லாம் நிகழ்ந்துவிடும் என நம்பத் தொடங்குகிறாள். இந்தத் தொடக்கம் தான் சுயத்துக்கான முடிவாகவும் மாறிப்போகி றது.

கடவுளின் தூதர்கள் என்பவர்களுக்குச் சாதா ரண மனிதனைவிடத் தேவைகள் அதிகமாக இருப்பதைக்கூட ஆராய முடியாத அளவுக்கு இருக்கிறாள் பெண்.

அதனால், கடவுள் மீதான அவளின் நம்பிக் கைகளை ஆசாமிகள் மீதும் வைக்கத் தொடங்கும் மூட நம்பிக்கை அவளைக் கவ்விக்கொள்கிறது. இப்போது Dependency Law&£i, Dependency-க்கும் மூட நம்பிக்கைக்கும் இடை யேயான பாலம் மிக உறுதியாகவே இருக் கிறது.

இந்த அலசல் எதற்காக என்றால், நம் வீட்டில் இப்படி எங்கேயோ முழுவதுமாக ஏதோ ஒரு மதத்தில், வழிபாட்டில், குரு சன்னிதானங் களைத் தொழுதபடி இருக்கும் பெண்களைக் கேலிக்குள்ளாக்காமல் அவர்களோடு பேசுவதை யும், புரியவைப்பதையும் தாண்டி, சார்பின்மை யைச் சரி செய்வதற்கான பகுத்தறிவைப் புகுத் துவதும், தாமும் ஏற்றுக்கொள்வதும் இன்றைய தனிமனிதக் கடமையாக இருக்கிறது. ★

## அரசு படையினரை நிபந்தனையின்றி நிச்சயம் பாதுகாக்கும் - அமரவீர!

கொழும்பு, செப். 07

நிபந்தனைகள் எதுவுமின்றி அரசு படையினரை நிச்சயம் பாது காக்கும் என ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டை சூரிய வெவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலா ளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சரத் பொன்சேகாவையும் நான் தேசத்துரோகியாக பார்க்கவில்லை, போரில் பெரியளவு சேவையை அவர் ற்றியிருந்தார்; காயமடைந் திருந்தார்.

அதேபோன்று, ஜகத் ஜய சூரிய வையும் நான் அவ்வாறு பார்க்க வில்லை. ஏனைய அனைத்து படைவீரர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளனர்.

எனவே, ஜனாதிபதியும் இலங்கை அரசும் இந்த அனைத்து படைவீரர்களுக்காகவும் நிபந்த னையின்றிக் குரல் கொடுக்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கு நடவ டிக்கை எடுக்கும்.

சரத் பொன்சேகா வெளியிட்டு வரும் கருத்துக்கள் தொடர்பில் விரைவில் அவருடன் பேச்சு நடத்தப்படும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள் ளார்.

## மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு!

கொழும்பு, செப். 07



ஸ்ரீலங்காவில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை யின் காரணமாக மத்திய மலை யகப் பிரதேசம் அடங்கலாக சில மாவட்டங் களில் விடுக்கப்பட்டி ருந்த மண்சரிவு அனர்த்த எச் சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று வெளியிட் டுள்ள அறிக்கையில் இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் மலைச்சாரலில் உள்ள மக்கள் மண்மேடு சரிதல், பாறைகள் புரள் தல் மற்றும் மண்சரிவு அபாயம் காணப்படும் பட்சத்தில் அவ் வாறான இடங்களிலிருந்து வெளி யேறவேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர் பில் இடர் முகாமைத் துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நதிகளின் தாழ்நிலப் பிரதே சங்களில் உள்ள மக்கள் வெள்ளம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தியுள் ளது.

இது தொடர்பான விடயங்களைத் தெரிவிப்பதற்கு 117 அல்லது 267302 என்ற தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை பொலிஸார், முப் படையினர் உள்ளிட்ட அதிகாரி களுக்குத் தற்போதைய அனர்த்த நிலை தொடர்பாக தெரியப்படுத் தப்பட்டிருப்பதாக இடர்முகாமைத் துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# விநாயகர் சிலை கரைப்பு; மராட்டியில் 15 பேர் சாவு!

மராட்டிய மாநிலத்தில் கடந்த சில தினங்களாக விநாயகர் சிலைகளை கடலில் கரைத்து வருகின்றனர். இவ்வாறு விநாயகர் சிலை கரைப்பின் போது மராட்டியில் 15 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விநாயகர் சதுர்த்தி பண்டிகை, கடந்த மாதம் 25 ஆம் திகதி தொடங்கியது. அதையொட்டிப் பொது இடங்களிலும், வீடுகளிலும் பலவித உருவங்களில் விநாயகர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது.

இந்தப்பண்டிகையின்இறுதி நிகழ்ச்சியாக பெரிய மற்றும் சிறிய அளவிலான விநாயகர் உருவச் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர் நிலைகளில் கரைக்கும் நிகழ்ச்சி மராட்டிய மாநிலத்தில் வெகுசிறப்பாக நடைபெறுவது வழக்கம். இந்நிலையில், மராட்டிய மாநிலத்தில் கடந்த சில தினங்களாக விநாயகர் சிலைகளை கடலில் கரைத்து வருகின்றனர். இந்த கோலாகலத்துக்கு இடையே சிலர் உயிரிழந்துள்ளனர். அவுரங்காபாத் மாவட்ட சிவனை ஏரியில் விநாயகர் சிலைகள் கரைக்கும் போது, அந்த ஏரியில் மூழ்கி 3 பேர் பலியானார்கள்.



இதேபோல், புனேவில் 4 பேரும், நாசிக் மற்றும் ஜல்காவில் 2 பேரும், பீட் மாவட்டத்தில் தலா ஒருவரும் பலியாகினர். மேலும், அகமதாபாத், சதாரா, பர்பானி ஆகிய மாவட்டங்களிலும் தலா ஒருவர் பலியாகியுள்ளனர்.


முக்கிய இடங்களில் வைக்கப்பட்ட சுமார் 7 ஆயிரம் சிலைகள் மற்றும் வீடுகளில் வைக்கப்பட்டிருந்த 33 ஆயிரம் சிலை கள் கடல் மற்றும் ஏரி, ஆறு, குளங்களில் கரைக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

## அ.தி.மு.க. ஆட்சி நீடிக்க முதல்வரை மாற்றுக!

### சுப்பிரமணியசாமி யோசனை

புதுடில்லி.செப்.7

அ.தி.மு.க. ஆட்சி தொடர்வதற்கு வசதியாக மற்றொருவரை முதலமைச்சராகத் தெரிவு செய்யுமாறு எடப்பாடி பழனிசாமி சசிகலாவிடம் கூற வேண்டும் என பாரதீய ஜனதா மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி தெரிவித்துள்ளார்.



சென்னையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, ஆளும் கட்சி, எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தினார். இந்தக் கூட்டம், அவர் தனிப் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கவில்லை எனக் காட்டியது.

இதையொட்டி பா.ஜனதா மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி டுவிட்டரில் வெளியிட்ட செய்தியில் கூறியவை வருமாறு:-

எடப்பாடி பழனிசாமி முறையாக பெரும்பான்மையை இழந்துவிட்டார். அ.தி.மு.க. ஆட்சி தொடர்வதற்கு வசதியாக மற்றொருவரை முதலமைச்சராக தேர்வு செய்யுமாறு அவர் சசிகலாவிடம் கூற வேண்டும். அப்படி செய்யாவிட்டால், தி.மு.க. ஆட்சி அதிகாரத்தில் வந்து விடும் என்று சுப்பிரமணியசாமி கூறினார். (ப)

## மூத்த பத்திரிகையாளர் கவுரி துப்பாக்கியால் சுட்டுக்கொலை

பெங்களூர்.செப்.7

மூத்த பத்திரிகையாளர் கவுரி லங்கேஷ் பெங்களூரில் உள்ள தனது இல்லத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள ராஜேஸ்வரி நகரில் வசித்து வந்தவர் கவுரி லங்கேஷ் (வயது-55). பிரபல நாளிதழ்களில் பணியாற்றிய இவர் தற்போது வாரப்பத்திரிகை ஒன்றை நடத்தி வருகிறார். துணிச்சல் மிக்க பத்திரிகையாளரான இவர் மதவாதத்திற்கு எதிராகத் தொடர்ந்து எழுதி வந்துள்ளார்.



இந்நிலையில், நேற்று மாலை தனது இல்லத்தில் கவுரி லங்கேஷ் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த நிலையில் ரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்துள்ளார். அவரது சடலத்தைக் கைப்பற்றிய பொலிஸார் பிரேத பரிசோதனைக் காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

வெகு அருகில் இருந்து அடையாளம் தெரியாத நபர் கவுரியை சுட்டுள்ளார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். கவுரியின் மரணத்திற்கு கேரளா மற்றும் மேற்கு வங்காள முதல்வர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## போட்டியில் 2.5 கிலோ சோறு சாப்பிட்டு அசத்தினார் ஒருவர்!

கேரளாவில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு நடத்தப்பட்ட சோறு சாப்பிடும் போட்டியில் ஒரு மணி நேரத்தில் 2.5 கிலோ சோறு சாப்பிட்டு நபர் ஒருவர் 5ஆயிரத்து ஒரு ரூபா பரிசைப் பெற்றுள்ளார்.

உள்ளூர் கிளப் ஒன்றின் சார்பாக சாப்பிடும் போட்டி நடத்தப்பட்டது, இதில் போட்டியில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் ஒரு மணி நேரத்திற்குள் 2.5 கிலோ சோறு சாப்பிட வேண்டும்.



சோறுடன் சேர்த்து மோர்க்குழம்பு, ஊறுகாய் இவர்களுக்குப் பரிமாறப்பட்டது, இதில், கே.எச். நசீர் என்பவர் 30 நிமிடங்களுக்குள் 2.5 கிலோ சோறு சாப்பிட்டு முதல் பரிசான, 5ஆயிரத்து ஒரு ரூபா தொகையை பெற்றார்.

இந்தப் போட்டி, 2 சுற்றுக்களாக வைக்கப்படும், முதலில் சுற்றில் வெற்றிபெற்றவர்கள் இரண்டாவது சுற்றிற்குச் செல்வார்கள், இந்த இரண்டாவது சுற்றில் வெற்றியாளர்கள் உறுதி செய்யப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## ஒரிசாவில் பன்றிக் காய்ச்சல்; சாவு எண்ணிக்கை 41 ஆக உயர்வு!

புவனேஸ்வர்.செப்.7

ஒரிசா மாநிலத்தின் பல மாவட்டங்களில் பரவிவரும் பன்றிக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.

ஒரிசா மாநிலத்தில் உள்ள 30 மாவட்டங்களில் 22 மாவட்டங்களை H1N1 எனப்படும் பன்றிக்காய்ச்சல் நோய்த்தொற்று தாக்கியுள்ளது. நேற்று முன்தினம் 30 பேருக்கு இந்த நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 355 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கிடையே, பன்றிக் காய்ச்சல் நோய்க்காக ஜகத்சிங்பூர் மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒரு பெண் உயிரிழந்தமையை அடுத்து இந் நோயின் தாக்கத்தால் பலியானோர் எண்ணிக்கை 41ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஒரிசாவைத் தாக்கிய பன்றிக்காய்ச்சல் நோய்க்கு 13 பேர் பலியாகினர். இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்குள் 41 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அம்மாநில மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

பன்றிக்காய்ச்சல் நோயைச் சமாளிப்பதற்குத் தேவைப்படும் மருந்துகள் போதுமான அளவில் கையிருப்பில் இருக்கின்றன எனவும் மக்களை பீதி அடைய வேண்டாம் எனவும் அம்மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# மியன்மாரில் இருந்து பங்களாதேஷில் ஒரே நாளில் 36 ஆயிரம் பேர் தஞ்சம்!





பாங்கொக்.செப்.7

ரோஹிங்கியா முஸ்லிம்கள் 36 ஆயிரம் பேர் கடந்த 24 மணி நேரத்தில் மியன்மார் நாட்டில் இருந்து வெளியேறி அண்டை நாடான பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக முறைப்படி கடந்த ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அதில் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய கட்சி (என்.எல்.டி.) இரு சபைகளிலும் 80 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினேவில் சிறுபான்மை ரோஹிங்கியா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். பங்களாதேஷ் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் தாக்குதலால் உயிருக்குப் பயந்து ரோஹிங்கியா முஸ்லிம்கள் பங்களாதேஷிற்குத் தப்பிச் சென்ற வண்ணம் உள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றின் வழியாக படகில் செல்லும் பலர் விபத்துகளில் சிக்கிஉயிரிழந்து வருகின்றனர். மியன்மாரில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளின்மீது கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரோஹிங்கியா போராளிகள் தாக்குதல் நடத்தியமையைத்தொடர்ந்து அவர்களுக்கு எதிரான இராணுவ வேட்டை தீவிரமாகி உள்ளது.

பங்களாதேஷில் ஏற்கனவே சுமார் 4 லட்சம் ரோஹிங்கியா மக்கள் அகதிகளாக வசித்து வருகின்றனர் என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், மியன்மாரில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் சுமார் 87 ஆயிரம் பேர் பங்களாதேஷ் நாட்டின் எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக அகதிகள் முகாமில் தஞ்சம் அடைந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் சுமார் 36 ஆயிரம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் மியான்மர் நாட்டில் இருந்து வெளியேறி பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தற்காலிக முகாம்களில் அகதிகள் கூட்டம் நிரம்பி வழியும் நிலையில் நேற்று முன்தினம் பங்களாதேஷிக்குள் நுழைந்த அகதிகள் அனைவரும் தங்குவதற்கு பாதுகாப்பான இடமின்றி, எல்லையோர கிராமப்புறங்களில் உள்ள வயல்காடுகளிலும், வெட்டவெளிகளிலும் தங்கியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணையம் கவலை தெரிவித்துள்ளது.

## பறக்கும் விமானத்தில் செல்பி எடுத்த விமானி



டுபாய்.செப்.7

விமானி ஒருவர் பறக்கும் விமானத்தில் ஜன்னலுக்கு வெளியே எட்டிப்பார்த்து செல்பி எடுத்ததாக வெளியான புகைப்படம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஐக்கிய அமீரகத்தில் வசித்து வரும் பிரேசில் நாட்டு விமானி ஒருவர், சமீபத்தில் டுபாயில் உள்ள பாம் ஜுமைரா தீவுக்கு மேலே விமானத்தில் பறந்துள்ளார். அப்போது, விமானிகளின் அறையில் உள்ள ஜன்னலால் வெளியே எட்டிப் பார்த்தபடி செல்பி எடுத்தார் எனக் கூறி, அந்த படத்தை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார்.

பாதி உடல் வெளியே தெரியும்படி உள்ள இந்தப் புகைப்படத்தின் பின்னணியில் டுபாயின் பாம் ஜுமைரா தீவு தெரிவது போன்று உள்ளது. இந்தப் புகைப்படத்தை 15 ஆயிரம் பேர் லைக் செய்துதங்கள் ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ள அதேசமயம், பலர் சந்தேகங்களையும் எழுப்பி கருத்தை பதிவு செய்துள்ளனர்.

'இது நிச்சயமாக உண்மையான புகைப்படமாக இருக்காது. Green Screen என்ற தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி போட்டோஷாப் செய்துள்ளார்' என ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார். 'வானத்தில் பறந்துகொண்டு இருக்கும் போது விமானியின் தலைமுடி கலையாமல் நேராக இருப்பதும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது' எனச் சிலர் கூறியுள்ளனர்.

## ஆபாசப் படம் பிரசுரித்த வழக்கில் இளவரசிக்கு ரூ.ஒரு கோடி நஷ்டஈடு!



இளவரசி கேத் மிடில்டனின் ஆபாசப் புகைப்படம் பிரசுரித்த பத்திரிகை, இளவரசர் வில்லியம், இளவரசி கேத் மிடில்டன் தம்பதிக்கு ஒரு கோடி ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று பிரான்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இங்கிலாந்து இளவரசர் வில்லியம் தனது மனைவி இளவரசி கேத்மிடில்டனுடன் கடந்த 2012ஆம் ஆண்டு செப்ரெம்பரில் பிரான்ஸ் சென்று இருந்தார். அப்போது கணவன்-மனைவி இருவரும் கடற்கரையில் சூரியக் குளியலில் ஈடுபட்டனர்.

இளவரசி கேத் மிடில்டன் 'பிகினி' நீச்சல் உடையில் இருந்தார். பிரான்ஸில் வெளியாகும் பிரபல பத்திரிகை அத்துமீறி அவர்களை ஆபாசமாகப் புகைப்படம் எடுத்துப் பிரசுரித்தது.

அதை எதிர்த்து பிரான்ஸ் கோர்ட்டில் இளவரசர் வில்லியம் - கேத்மிடில்டன் தம்பதி மான நஷ்டஈடு வழக்குத் தொடர்ந்தனர். அதில் தங்களுக்கு 15 கோடி ரூபாநஷ்டஈடு கேட்டு இருந்தனர்.

நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்த நிலையில் இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது. அதில் ஆபாச புகைப்படம் பிரசுரித்த பத்திரிகை இளவரசர் வில்லியம், இளவரசி கேத் மிடில்டன் தம்பதிக்கு ஒரு கோடி ரூபா நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டது.

மேலும் ஆபாசப் புகைப்படம் எடுத்த புகைப்பட நிபுணர்கள் சிரில் மொராயூக்கு 10 லட்சமும் ரூபாவும், டொமினிக் ஜாகோ விட்சுக்கு 5 லட்சமும் ரூபாவும் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது. பத்திரிகை ஆசிரியர் மற்றும் பதிப்பாளருக்கு தலா 36 கோடி ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

## வடகொரியா அணுகுண்டு எதிரொலி: தென் கொரியா இராணுவப் பயிற்சி



உலக நாடுகளின் எதிர்ப்புகளை மீறி வடகொரியா அணு குண்டு சோதனை நடத்தியுள்ள நிலையில், தென் கொரியா இராணுவப் பயிற்சியை முன்னெடுத்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும், பொருளாதாரத்தடைகளையும் பொருட்படுத்தாத வடகொரியா, சமீப காலமாக பலமுறை அணுகுண்டுகளையும், கண்டம்விட்டு கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்துள்ளது.

சுங்ஜிபேகாம் பகுதியில் நேற்று முன் தினம் சக்திவாய்ந்த அணுகுண்டினை பூமிக்கு அடியில் வடகொரியா பரிசோதித்ததாக செய்திகள் வெளியாகின.

இந்த ஐதரசன் குண்டு பரிசோதனையில் முழுமையான வெற்றி பெற்றதாகவும் வடகொரியா தெரிவித்தது. இதற்கு அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. ஐ.நா. சபையும் வடகொரியாவின் செயலுக்குக் கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில், உலக நாடுகளின் எதிர்ப்புகளை மீறி வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தியுள்ள நிலையில், தென் கொரியா இராணுவ பயிற்சி மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# சென்.ஜோன்ஸ் அணியிடம் தொடர்ந்து தோல்வியடையும் யாழ்ப்பாணம் மத்தி

(கங்கர்)



சென்.ஜோன்ஸ் கல்லூரியிடம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தொடர்ந்து தோல்வியடைந்து கொண்டிருக்கின்றது. வடக்கின் மாபெரும் போர், ஒருநாள் ஆட்டம் என்பவற்றிலும் தோல்வியடைந்த யாழ்ப்பாணம் மத்தி, கிரிக்கெட் தாக்குதல் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியிலும் சென்.ஜோன்ஸ் அணியிடம் தோல்வியைச் சந்தித்துள்ளது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் மற்றும் பிரித்தானிய தமிழ் கிரிக்கெட் லீக் இணைந்து, வடக்கு – கிழக்குப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக் கிடையில் இருபது – 20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தின.

கிரிக்கெட் தாக்குதல் - 2017 (cricket bash - 2017) என்னும் பெயரில் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரையில் இந்தச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட்டன. முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று ஒவ்வொரு பிரிவிலும் இருந்து தலா இரு அணிகள் தெரிவு செய்யப்பட்டு, தொடர்ந்து காலிறுதி, அரையிறுதி ஆட்டங்கள் நொக் கவுட் முறையில் நடைபெற்றன.

அந்தவகையில் அரையிறுதியாட்டங்கள் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலையில் நடைபெற்றன. தொடர்ந்து இறுதியாட்டம் மாலையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### முதலாவது அரையிறுதியாட்டம்

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற சென்.ஜோன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

அதற்கிணங்கக் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, தொடக்கம் முதல் பெரும் சரிவை எதிர்கொண்டது. 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து ஒரு கட்டத்தில் தவித்தது. எனினும், பின்வந்த வீரர்கள் ஓரளவு சிறப்பாகத் துடுப்பெடுத்தாட, 16.4 ஓவர்களில் 65 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஜெ.அனோஜன் 33 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத்தார். 5 துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக, வி.யதுசன் 4 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

66 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய சென்.ஜோன்ஸ் அணி, சென்.பற்றிக்ஸ் அணியின் பந்துவீச்சால் பெரும் போராட்டத்துக்கு முகங்கொடுத்தது. எனினும், டி.செரோபனின் நிதான ஆட்டத்தால், 17.1 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. டி.செரோபன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் அணி சார்பாக, டி.ஆர்.பயோட்டிக், எம்.நிதுர்சன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுககளைக் கைப்பற்றினர்.

### இரண்டாவது அரையிறுதியாட்டம்

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கே.நிசானுஜன் 24, எஸ்.டினேஸ் 20, எம்.சுஜீவன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக, நிதுர்சன், தசோபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

115 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 13.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கௌதமன் 46, ஜெயதர்சன் 34, நிசாந்த் 18, ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

### இறுதிப்போட்டியில் வென்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி

இறுதிப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, துடுப்பாட்டத்தில் சற்றுத் தடுமாறியது. எனினும், மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர்கள் அணிக்கு கைகொடுக்க, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் டி.செரோபன் 25, ரி.டினோசன் 16, கே.கபில்ராஜ் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக, எஸ்.மதுசன் 3 விக்கெட்டுகளையும், கே.இயலரசன், பி.குகசதுஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

105 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, ஆரம்பம் முதல் தடுமாறியது. அந்தத் தடுமாற்றம் தொடர்ந்து நீடிக்க வெற்றியை நோக்கி நகரமுடியாமல் தவித்தது. இறுதி நேரத்தில் ஓவர்கள் முடிவடைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தோல்வியும் உறுதியானது. 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 87 ஓட்டங்களைமாத்திரம் அதுபெற்றது. துடுப்பாட்டத்தில் ஏ.நிதுசன் 23 ஓட்டங்களையும், எல்.ஜெயதர்சன் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக, கே.கபில்ராஜ், எம்.அபினேஸ், எஜ்.சுபீட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இறுதிப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் அணியின் டி.செரோபன், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் எஸ்.மதுசன், சிறந்த களத்தடுப்பாளராக சென்.ஜோன்ஸ் அணியின் எஸ்.சௌமியன், சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக சென்.ஜோன்ஸ் அணியின் ஜெ.சுபீட்சன், ஆட்டநாயகனாக சென்.ஜோன்ஸ் அணியின் கே.கபில்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 19 வயதுப்பிரிவு அணி, வடக்கின் மாபெரும் போரில் சென்.ஜோன்ஸ் அணியிடம் தோல்வியடைந்தது. தொடர்ந்து நடைபெற்ற ஒரு நாள் போட்டியிலும் தோல்வியடைந்தது. தற்போது 20 – 20 போட்டியிலும் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








# அதிரடி நட்சத்திரங்களுடன் கிரிக்கெட் உலகைக் கலக்க வரும் ரி-10 போட்டி

கிரிக்கெட் உலகில் அண்மைக்காலமாக ஏற்படும் பல மாற்றங்களால் பாரம்பரிய கிரிக்கெட்டிலிருந்து நவீன கிரிக்கெட் பல முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் பெற்று வருகின்றது. டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஒருநாள் போட்டிகளுக்கும், பின்னர் ரி-20 போட்டிகளுக்கும் மாற்றம் பெற்ற கிரிக்கெட் தற்போது அதிரடியாக ரி -10 போட்டிகளை நடத்தக் களம் காண ஆயத்தமாகவுள்ளது.

10 ஓவர்கள், 7 அணிகள், 90 நிமிடங்கள் என மிகக் குறுகிய நேர எல்லைக்குள் 4 நாள்கள் நடைபெறவுள்ள இத்தொடர், கிரிக்கெட் உலகின் அதிரடி நட்சத்திரங்களான சஹீட் அப்ரிடி, குமார் சங்கக்கார, கிறிஸ் கெயில், விரேந்தர் செவாக் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இவ்வருட டிசம்பர் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உலகின் தலை சிறந்த 50 சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பல புதிய வீரர்களின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகவுள்ள இப்போட்டித் தொடருக்கான வீரர்களை ஏலம் எடுக்கும் நிகழ்வு வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளது. உலகின் மிக முக்கியமான கிரிக்கெட் தொடர்களை நடத்திய பெருமையயைக் கொண்ட ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

விறுவிறுப்பான இத்தொடரின் ஒவ்வொரு போட்டியிலும் உலகின் பல்வேறு நாடுகளின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்களின் பங்குபற்றுதலுடன் போட்டிகள் இடம்பெறவுள்ளன. கிரிக்கெட் போட்டிகள் மட்டுமல்லாது பிரம்மாண்டமான ஆரம்ப நிகழ்வுகள், நடன மற்றும் இசை நிகழ்ச்சிகள் எனப் பல மாற்றங்களுடன் இப்போட்டிகள் ஏற்பாடாகின்றன.

பஞ்சாபிஸ், பக்துான்ஸ், மராத்தா, பங்லாஸ், லங்கன்ஸ், சிந்திஸ் மற்றும் கேரலைடிஸ் என ஏழு அணிகளின் பங்குபற்றுதலுடன் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தருணம் வரை பக்துான்ஸ் அணியின் தலைவராக சஹீட் அப்ரிடி தெரிவு செய்யப்பட்டுள்ளமையுடன், பங்லாஸ் அணித் தலைவராக சகிப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஏனைய அணிகளுக்கான வீரர்கள் எதிர்வரும் தினங்களில் இடம்பெறவுள்ள ஏலத்தில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ரி-10 கிரிக்கெட் தொடரின் தலைவரும் ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கெட் சபையின் உறுப்பினருமான சஜீ உல் முல்க் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் “இப்போட்டிகளை நடத்துவது குறித்து நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ரி-10 தொடர் கிரிக்கெட்டின் அடுத்த கட்டமாகும். ரி-20 போட்டிகள் நமக்கு தரும் மகிழ்ச்சியைப் போல ரி-10 தொடரும் இருக்கும்” - எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டின் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் சஹீர் அப்பாஸ் கருத்துத் தெரிவிக்கையில் “இது கிரிக்கெட் உலகின் நேரத்துக்குள் 90 நிமிடங்கள் உள்வாங்கப்பட்ட தருணமாகும். இது கிரிக்கெட்டின் அடுத்த கட்ட நகர்வாகும்.” - எனத் தெரிவித்துள்ளார்.

# 2022 பொதுநலவாய நாடுகளின் போட்டிகளிலிருந்து கிரிக்கெட் நீக்கம்

2022ஆம்ஆண்டுநடைபெறவுள்ளபொதுநலவாயநாடுகளின் போட்டிகளிலிருந்து கிரிக்கெட் விளையாட்டை நீக்குவதற்குப் பொதுநலவாயநாடுகளின்விளையாட்டுக் குழு தீர்மானித்துள்ளது.

2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள போட்டித் தொடரில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கு முன்னதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் சர்வதேசக் கிரிக்கெட் பேரவைக்கும் அறிவிக்கப்பட்டது. எனினும், குறித்த போட்டிகள் இடம்பெறவுள்ள ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இங்கிலாந்துமற்றும்இந்தியஅணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் மற்றும் நெட்வெஸ்ட் மற் றும் கரீபியன் பிரீமியர் லீக் ரி-20 தொடர்கள் இடம்பெறவுள்ளமையால், சர்வதேசக் கிரிக்கெட் பேரவை போட்டி அட்டவணையை மாற்றுவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து 2022ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவிலிருந்து கிரிக்கெட் போட்டிகளை இணைத்துக் கொள்ளும் திட்டத்தை அந்த அமைப்பு கைவிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெண்களுக்கான ரி-20 போட்டிகளை நடத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை அனுமதி அளித்திருந்த போதிலும், ஆண்களுக்கான போட்டிகளை நடத்துவதற்கு எந்தவொரு இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் கொள்கைக்கு அமைய விளையாட்டில் பாலின சமத்துவத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ள காரணத்தால் பெரும்பாலும் கிரிக்கெட் விளையாட்டு இடம்பெறுவது ஆரம்பத்திலிருந்து சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்தப் போட்டித் தொடர் முதற்தடவையாகதென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும், பொருளாதார நெருக்கடி, டர்பன் நகரில் உரிய வசதிகள் இல்லாமை மற்றும் போதியளவு அனுசரணையாளர்கள் கிடைக்காமை போன்ற காரணங்களால் அப்போட்டிகளை நடத்துவதிலிருந்து விலகிக் கொள்வதாக தென்னாபிரிக்காவின் விளையாட்டுத்துறை அமைச்சு, பொதுநலவாய நாடுகள் விளையாட்டு போட்டிகளின் அமைப்புக்கு கடந்த சில மாதங்களுக்கு முன் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு பிரித்தானியாவின் லிவர்பூல் மற்றும் பேர்மிங்ஹறம் ஆகிய நகரங்கள் தற்போது விண்ணப்பிக்கவுள்ள நிலையில், உலக கிரிக்கெட்டில் பிக் 3 என அழைக்கப்படுகின்ற நாடுகளில் ஒன்றான இங்கிலாந்து கிரிக்கெட் சபை, அனுமதியளித்தால் 2022ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழாவில் கிரிக்கெட் விளையாட்டு இடம்பெறலாம் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



# தேசியமட்ட அஞ்சலோட்டப் போட்டி யாழில்

*(கங்கா)*

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான அஞ்சலோட்டப் போட்டிகள் நாளை தொடக்கம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தொடர்ந்து 2 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்த அஞ்சலோட்ட போட்டிகளுக்கு, நெஸ்லே நிறுவனம் அனுசரணை வழங்குவதுடன், வடமாகாண கல்வி அமைச்சு போட்டிகளை ஒழுங்குபடுத்தியுள்ளது.

இருபாலாருக்குமாக நடைபெறவுள்ள இந்த அஞ்சலோட்டப் போட்டியில் 164 ஆண்கள் பாடசாலை அணிகளும், 138 பெண்கள் பாடசாலைகள் அணிகளுமென மொத்தமாக 302 பாடசாலை அஞ்சலோட்ட அணிகள் இதில் பங்குபற்றுகின்றன.

12, 14, 16, 18 மற்றும் 20 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில், 38 பிரிவுகளாக நடத்தப்படும் அஞ்சலோட்டப் போட்டியில் சுமார் 5 ஆயிரம் வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர். 4X50, 4X100, 4X200, 4X400, 4X800 என்ற அடிப்படையில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. ஆண்கள், பெண்கள் தனி அணியாகவும், முதன்முறையாக கலப்பு அணிகளுக்கான போட்டிகளும் இம்முறை இடம்பெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் சமத்துவம், அணியாக வேலை செய்தல், சகோதரத்துவம், கூட்டுறவு, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கில் இந்த அஞ்சலோட்டம் நடத்தப்படுகின்றது.

ஆரம்பநாள் நிகழ்வுகளுக்குப் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ்.இராதாகிருஷ்ணனும், சிறப்பு அதிதியாக வடமாகாணக் கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இறுதிநாள் நிகழ்வுக்குபிரதமஅதிதியாகவடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

# டெண்டுல்கரின் சாதனை பற்றி சிந்திக்கவில்லை – வீராட்கோஹ்லி



கொழும்பு.செப்.7

ஒருநாள் போட்டிகளில் அதிக சதம் எடுத்த டெண்டுல்கரின் சாதனை பற்றி சிந்திக்கவில்லை என இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி கூறியுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் அதிக சதம் எடுத்து சாதனை படைத்த வீரராக டெண்டுல்கர் உள்ளார். அவர் 452 இன்னிங்ஸில் 49 சதங்களை அடித்துள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக விராட்கோஹ்லி 30 சதம் அடித்து (186 இன்னிங்ஸ்) ரிக்கிபொண்டிங்குடன் இணைந்து 2ஆவது இடத்தில் உள்ளார். 30 சதங்களை அதிவேகமாக எடுத்த சாதனையாளராக கோஹ்லி இருக்கிறார். இலங்கைக்கு எதிராக 2 சதம் அடித்த அவர், அதே அதிரடியுடன் ஆடினால் டெண்டுல்கர் சாதனையை முறியடிப்பார்.

இதுகுறித்து விராட் கோஹ்லி கூறும்போது, டெண்டுல்கரின் சாதனை பற்றி நான் சிந்திக்கவில்லை. அவர் ஓர் அற்புதமான வீரர். பொண்டிங் சாதனையை சமன் செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய பாடசாலைக் கிரிக்கெட் வீரர் ஹோட்டல் தடாகத்தில் மூழ்கிச் சாவு

இலங்கையில் நடைபெறும் 17 வயதுக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக இந் தியாவிலிருந்து 19 வீரர் களுடன் இலங்கை வந்திருந்த அந்நாட்டு பாடசாலை கிரிக்கெட் வீரர் ஒருவர் யமுனகம பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் தனது அணியினரு டன் நீந்திக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி மரணமானார்.

குஜராத்தைச் சேர்ந்த பன்னிரண்டு வயது வீரன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீச்சல் தடாகத்தில் நீரில் மூழ்கிய நிலையில் மீடகப் பட்ட சமயம் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டது. (உ)

# எம்.பிக்கள் அலுவலகத்துக்காக மேலதிகமாகத் தலா ரூ.1 லட்சம்

கொழும்பு, செப்.07

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தமது அலுவலகம் ஒன்றைப் பேணுவதற்கான செலவினமாக மாதாந்தம் மேலும் ஒரு லட்சம் ரூபா பெறுவார்கள் என அறியப்படுகின்றது.

இதற்காக 13 கோடி 44 லட்சம் ரூபாவை மேலதிகமாகப் பெறுவதற்கான மதிப்பீட்டுத் திட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (உ)

# வியட்நாம் கப்பலில் இருந்த சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, செப்.07

கொழும்புத் துறைமுகத்தி லுள்ள கப்பல் ஒன்றில் விநியோகிக்கப்படுவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 133,980 சிகரெட்டுகள் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் துறைமுகப் பிரிவினரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

வியட்நாம் நாட்டிற்கு சொந்தமான கப்பலொன்றில் வெளிநாட்டு சிகரெட்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன எனக்கிடைக் கப்பட்ட தகவலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட சோதனையின் போதே இந்தச் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டன எனச் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சிகரெட்டுகள் சுமார் 66 லட்சம் பெறுமதி வாய்ந்தவை.

இந்தச் சிகரெட்டுகள் தொடர்பில் சுங்க திணைக்களத்திற்கு அறியப்படுத்தாமை காரணமாக வியட்நாம் கப்பலின் தளபதிக்கு 10 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்குத் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இந்த வழக்கில் முதலமைச்சர் எனக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையையே மேற்கொண்டார் என்பதை நான் நிரூபிக்க முயன்றுள் ளேன். அதற்கு நீதி கிடைக்குமாயின் எனக்கு மகிழ்ச்சியே.

மறுபுறம், என்னைப் பதவி நீக்கும்படி தம்பாட்டில் உத்தர விடும் அதிகாரம் முதலமைச் சருக்கு உண்டு என்று நீதிமன் றம் தீர்ப்பளிக்குமாயின், 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண முதலமைச்சருக்குத் தகுந்த அதிகாரம் இருப்பது அதனால் உறுதிப்படுத்தப்படு கின்றது என நான் மகிழ்வேன்.

அதேநேரம், அப்படி உத்தர விடும் அதிகாரம் அவருக்குக் கிடையாது என நீதிமன்றம் தீர் மானிக்குமாயின், 13 ஆவது திருத்தத்தின் கீழ் ஒரு மாகாண முதலமைச்சருக்கு உள்ள அதி காரம் இவ்வளவுதான் என்ற விடயத்தில் உண்மை நீதிமன் றத்தில் அம்பலமாயிற்று என நான் மகிழ்வேன்.

எனவே, நீதிமன்ற முடிவு எப்படி வந்தாலும் எனக்கு மகிழ்ச் சியே. - என்றார் அவர். (உ)

## 20 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் தனது முடிவை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் அறிவிக்கும்.

நேற்று உயர்நீதிமன்ற விசாரணைகளின்போது சட்டமா அதிபர்தரப்பில் மேற்படி இருபதாவது திருத்தத்தில் புதிதாகச் சேர்க்கப் பட்டிருக்கும் மாற்றங்கள் குறித்து நீதியரசர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த இருபதாவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட திகதியிலி ருந்து சரியாக ஒரு வருடத்தில் அனைத்து மாகாணசபைகளும் கலைந்ததவையாகக் கருதப் படும்.

அதன் பின்னர் உரிய திகதி யில் - ஒரே நாளில் - அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடக்கும். அதனைத் தேர்தல் ஆணைய கம் மேற்கொள்ளும் -

இந்த ஏற்பாட்டுக்கு வசதியாக இப்போது பதவிக்காலம் முடியும் மூன்று மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் சுமார் ஒரு வருடம் நீடிக்கப்படும் -

அனைத்து மாகாண சபை களும் ஒரே திகதியில் கலைக் கப்படும்போது தற்போதுள்ள மூன்று சபைகளின் (வடக்கு மாகாண சபை உட்பட) காலம் அப்போதுதான் முடிவடைவதாக இருக்கும். எஞ்சிய மூன்று சபை களின் பதவிக் காலம் ஒரு வருடம் முன்னதாக முடிவுறுத்தப் படும் -

இதன் பின்னர் தெரிவு செய் யப்படும் மாகாணசபை ஒன்று அதன் பதவிக் காலம் முடிவடை வதற்குமுன்னர் கலைக்கப்படும் நிலைமை ஏற்பட்டால் - எஞ்சிய பதவிக் காலம் ஒன்றரை வருடத் துக்கு அதிகமாக இருக்குமா யின் - அந்த எஞ்சிய காலத்துக் கான நிர்வாகம், இடைக்கால மாகாண சபைத் தேர்தல் ஒன் றின் மூலம் தெரிவுசெய்யப் படும். எஞ்சிய காலம் ஒன்றரை வருடத்துக்கும் குறைவாக இருந்தால் அந்தச் சபையின் எஞ்சிய நிர்வாகக் காலம் ஆளு நரினால் நிர்வகிக்கப்படும்.

- இந்த மாற்றங்களே இப் போது புதிதாக இருபதாவது திருத்தத்தில் செய்யப்பட்டுள் ளன எனச் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பு உருவாக்கத்துக் கானவழிகாட்டல் குழு நேற்றுக் கொழும்பில் எழுபத்துமூன்றா வது தடவையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது.

அப்போதே இடைக்கால அறிக்கையை அரசமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பிக்கும் இறுதி முடிவு எடுக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் அனேகமாக எல்லாத் தரப்பு களின் பிரதிநிதிகளும் பங்குபற் றினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வழிகாட்டல் குழு இறுதி செய்திருந்த இடைக்கால அறிக்கையின் வடிவத்தை அப்படியே அங்கீகரிப்பது என்றும் -

கட்சிகள் அளித்த அறிக்கை களைப் பின் இணைப்பாகச் சேர்த்துக்கொள்வது என்றும் - நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கை யுடன் முன் இணைப்பாகச் சமர்ப் பிக்கப்படவேண்டிய செய்தியின் வாசகமும் நேற்று இறுதி செய் யப்பட்டது. எதிர்வரும் 20, 21, 22 ஆம் திகதிகளில் ஒரு நாளில் அரசமைப்புப் பேரவையாகச் செயற்படும் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டவும் -

அத்திகதியில் இந்த இடைக் கால அறிக்கையை உறுப்பினர் களுக்குக் கையளித்து அதனை வெளியிடவும் - நேற்று முடிவு செய்யப்பட்டது.

பெரும்பாலும் எதிர்வரும் 21 ஆம் திகதியே நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின் றது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் இந்த விடயத்தில் தீர்மானம் எடுப்பதை வடக்கு மாகாணசபை மீண்டும் ஒரு தடவை - இன்றும் - திரும்பவும் - ஒத்திவைக்கும் முடிவை எடுக் கும் சாத்தியமே அதிகம் தென் படுகின்றது.

கடந்த திங்களன்று இந்த விட யம் குறித்து ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபை கூடிய போது இருபதாவது திருத்தத்தை வடக்கு மாகாண சபை கடுமை யாக எதிர்க்க வேண்டும் என முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ் வரன் கோரியிருந்தார்.

அதற்கான காரணங்களையும் அவர் அங்குதாம் ஆற்றிய உரை யில் வெளிப்படுத்தியிருந்தார்.

எனினும், அந்தக் காரணங் களைக் களையும் விதத்திலான திருத்தங்களைக் கூட்டமைப் பின் சார்பில் அதன் பேச்சாள ரும், ஜனாதிபதி சட்டத்தரணியு மான எம்.ஏ. சுமந்திரன் எம்.பி., பிரதமருடன் தொடர்புகொண்டு அந்த இருபதாவது திருத்த நகலில் செய்துள்ளார். அது பற்றிய விளக்கம் நேற்று உயர் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் தரப்பினால் தெரியப்படுத்தப் பட்டதாகவும் அறியவந்தது.

கூட்டமைப்பின் தலைமை தனக்கு இருபதாவது திருத்தத் தில் உள்ள கரிசனையான விட யங்கள் குறித்து அரசுத் தலை மையுடன் பேசி, மாற்றங்களைச் செய்திருப்பது குறித்து நேற்றி ரவு வரை வடக்கு மாகாண சபை யின் கூட்டமைப்புப் பிரிவுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறியவரவில்லை.

அதனால் கூட்டமைப்புத் தலைமையின் வழிகாட்டல், தெளிவுபடுத்தல் சரியாகக் கிட் டாத சூழ்நிலையில் -

இருபதாவது திருத்த நகலில் புதிய மாற்றங்கள் வெளியாகியி ருப்பதான செய்திகளையும் -

உயர்நீதிமன்றத்தில் இந்த விட யம் விசாரிக்கப்படும் நிலையில் அவதானிக்கக் கூடியதாக இருப் பதால் அந்த விடயங்களையும் -

கிழக்கு மாகாணசபை இந்த விடயம் குறித்து எடுக்கும் தீர்மா னங்களையும் -

கவனத்திற் கொண்டு ஒரு தீர்க்கமான - தெளிவான - முடிவை எடுப்பதற்கு வசதியாக, வடக்கு மாகாண சபையில் இவ் விடயத்தில் முடிவு எடுப்பதைப் பிறிதொரு தினத்துக்கு சபை இன்று ஒத்திவைக்கும் என்று கருதப்படுகின்றது. (உ)

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு தினம் இன்று காலை செம்மணிப் பகுதியில் அனுஷ் டிக்கப்படவுள்ளது.

கிருஷாந்தியுடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்ட அவ ரது தாயார் மற்றும் அயலவர் ஆகியோரும் இதன் போது நினைவு கூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளனர்.

## அலோஸி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எது. அழைப்பாணை தொடர் பில் தெரியப்படுத்துவதற்காக அதிகாரிகள் அவரைச் சந்திக்க சென்ற போதும் வீட்டிலோ, காரி யாலயத்திலோ அவர் இருக்க வில்லை என ஆணைக்குழு வுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அலோசிய ஸுக்கு தெரியப்படுத்துமாறு அவரது வழக்கறிஞர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டது.

அர்ஜுன் அலோசியஸுக்கு இரட்டை பிரஜாவுரிமை இருப்ப தாகவும், அது தொடர்பில் தக வல்களை ஆணைக்குழு முன் னிலையில் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## உள்ளக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான மத்திய வங்கியின் உள் வீட்டு - அந்தரங்க - தகவல்கள் மற்றும் அது பற்றிய கேள்விகள் குறித்து முழு விடயங்களையும் அலோ ஸியஸ் நேரத்துடன் அறிந்திருந்தார்.

அச்சமயத்தில் அதிகாரத்தில் இருந்த ஒரு நண்பரிடம் இருந்து வலிமையான ஆலோசனை களையும் அவர் பெற்றுக் கொண் டிருந்தார் என்பதும் இந்தத் தொலைபேசி உரையாடல்கள் மூலம் தெரியவந்துள்ளதாம்.

தாம் பெற்றுக்கொண்ட அந்த ரங்கத் தகவல்களைத் தமது நிறுவன நிறைவேற்று அதிகா ரிக்கு அவர் வழங்கியமை பற் றிய தொலைபேசி உரையாடலே நேற்று ஆணைக்குழு விசா ரணையின்போது அரசுத்தரப்பி னால் சமர்ப்பிக்கப்பட்டு, ஒலிக்க விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு வளாகத்திற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு முன் வைத்த கோரிக்கைக்கு இணங்க, ஆயுதம் ஏந்திய பொலிஸார் ம ற்றும் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக் காக அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர் எனக் கூறப்பட்டது.

ஆணைக்குழுவால் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான முக்கிய ஆவணங் கள் பல, தற்போது அங்கு வைக் கப்பட்டிருக்கின்றமையே இதற் குக் காரணம் என்றும் தெரிவிக் கப்பட்டது. (உ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

அவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்துக்கு வரு வாராயின் அது நாட்டு மக்க ளின் பெரும் சாபக்கேடாகும் என்றும் அவர் சொன்னார். (உ)

## பிரிவினையைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டினார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைப் பலப்படுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி முயற்சிக்குமாயின் அதனைத் தாம் வரவேற்பார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொலன்ன பிரதேசத்தில் இடம் பெற்ற சமய நிகழ்வொன் றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத் துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (உ)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் பிரதிநிதி எம்.ஏ. சுமந்திரன் எம்.பியின் வழிகாட் டலிலேயே மேற்கொள்ளப்பட் டன என்ற செய்தி ஏற்கனவே 'காலைக் கதிர்' நாளிதழில் வெளி யாகியிருந்தமை தெரிந்ததே.

மாகாண சபைகள் பலவற்றி னால் இந்தத் திருத்தம் தொடர் பில் எழுப்பப்பட்ட பல சந்தேகங் களைக் களையும் விதத்திலான மாற்றங்களை முழு அளவில் செய்வதற்கு நேற்று முன்தினம் பிரதமர் தலைமையிலான குழு இணங்கியது. அது குறித்தே நேற்று உயர்நீதிமன்றிலும் தக வல் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பின்புலத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்ச ரும், இலங்கைத் தமிழரசுக் கட் சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண சபையில் கூட் டமைப்பின் சிரேஷ்ட பிரமுகரு மான துரைராஜசிங்கம், நேற்று மாலை கொழும்பில் எம்.ஏ.சுமந் திரனைச் சந்தித்து விடயங்களை விரிவாகக் கேட்டறிந்தார் எனத் தெரிகின்றது. அவர் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும் சந்திக்கவிருந்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கிழக்கு மாகாண சபையில் இன்று இருபதாவது திருத்தம் எடுக்கப்படும்போது அதனை ஆதரிக்கும் தீர்மானத்துக்கு கிழக்கு மாகாண சபையின் கூட்டமைப்புத் தலைமை வந்தி ருந்ததாக அறியவந்தது. (உ)

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசிய கட்சியின் தலை மையகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வண. எல்லே குணவங்ஸ தேரர் ஏனையவர்கள் செய்த வற்றைத் தாம் செய்தார் எனக் கூறும் ஒருவர் எனக் குறிப்பிட் டுள்ள சரத் பொன்சேகா, அவ ருக்குப் பித்துப் பிடித்துள்ளதா கவும் தெரிவித்தார்.

ஜகத் ஜயசூரிய இராணுவத் தளபதியாக இருந்தபோது சிறைச்சாலையில் இருந்த 25 பேரின் கொலைகள் மற்றும் ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூட்டுக் கும் உத்தரவிட்டிருந்தார் என வும் குற்றம் சுமத்தினார் சரத் பொன்சேகா.

தம்மைச் சிறையில் அடைத் துப் பழிவாங்கிய ஒருவர் தொடர் பில் தான் தனையும் கூறக்கூடாது எனத் தெரிவிப்பது சரியானதா என பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா கேள்வி எழுப்பினார். (உ)

# மைத்திரியின் போர்க்குற்ற அறிவிப்பால் மேற்குலகத் தூதுவர்கள் அதிருப்தி!

கொழும்பு, செப். 07

படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக்கு இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள அறிவிப்பால் கொழும்பிலுள்ள இராஜ தந்திரிகள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர் என இராஜ தந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இலங்கையின் சமகாலப் போக்கு, ஜெனீவாத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதில் அரசு காட்டும் ஆர்வம் தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலுள்ள மேற்குலக இராஜதந்திரிகள் இந்த வாரம் கூடவுள்ளனர் எனப் பெயர் குறிப்பிட விரும்பாத மேற்குலகின் மூத்த இராஜ தந்திரியொருவர் தெரிவித்துள்ளார்.



ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் 66ஆவது ஆண்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த திங்கள் கிழமை நடைபெற்றது.

அதில் உரையாற்றிய ஜனாதிபதி, போர்க் குற்றச்சாட்டு என்ற போர்வையில் இலங்கைப் படையினர்மீது கைவைப்பதற்கு எந்தவொரு வெளிநாட்டுக்கோ, நபருக்கோ, அமைப்புக்கோ இடமளிக்க மாட்டேன்.

புலிச்சார்பு அமைப்புகளிடம் பணம் வாங்கிக் கொண்டு அதன் கைக்கூலிகளாகச் செயற்படும் அரச சார்பற்ற அமைப்புகளின் தாளத்திற்கேற்ப ஆடுவதற்கு நான் தயாரில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்திருந்தார்.

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியும் பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றிய ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தலைமையிலான மனித உரிமை அமைப்புகள் பிரேஸிலில் போர்க்குற்ற விசாரணை வழக்கைத் தாக்கல் செய்திருந்தன.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஜனாதிபதியின் மேற்படி அறிவிப்பு அமைந்ததுடன், படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைக்கு இடமளிக்கப்படாது என்பதையும் எடுத்துரைக்கும் வகையில் அமைந்திருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம், பொறுப்புக்கூறும் கடப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு இலங்கை அரசு இணக்கம் வெளியிட்டிருந்தது.

அத்துடன், ஜெனீவாத் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அது உறுதியளித்திருந்தது.

இதனால்தான் இலங்கை அரசுக்கு அதைச் செய்வதற்கு 18 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டன. முன்னேற்ற அறிக்கை 2019 மார்ச் மாத அமர்வின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த நிலையில், ஜெனீவாவுக்கும்சர்வதேசசமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதியை அலட்சியப்படுத்துவதாகவே ஜனாதிபதி மைத்திரிபாலவின் அறிவிப்பு அமைந்துள்ளது என மனித உரிமை செயற்பாட்டாளர்களும், தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் சுட்டிக் காட்டுகின்றனர்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 36ஆவது மாநாடு இம்மாதம் 11 ஆம் திகதிமுதல் 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

மைத்திரியின் மேற்படி அறிவிப்பு இதன்போது இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(க)

## மானாயக்கரின் ஆலோசனையை அரசு கேட்பதில்லை- மஹிந்த!

கொழும்பு, செப். 07

தற்போதைய அரசு மாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளைச் செவிமடுப்பதில்லை என முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

பௌத்த மாநாயக்க தேரர்களால் வழங்கப்படும் ஆலோசனை வழிகாட்டல்களைத் தற்போதைய அரசு எந்த வகையிலும் செவிமடுப் பதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தால் புண்ணிய தலங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஊடாகவே அரசு ஏதேச்சாதிகாரப் போக்கில் செயற்படுவது அம்பலமாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரி பகுதியில் அமைந்துள்ள விஹாரை ஒன்றில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் சிங்களக் கிராமங்கள் அகற்றப்பட்டுள்ளன எனக் குற்றச்சாட்டு!

கொழும்பு, செப். 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டத்தில் வவுனியா சிங்கள கிராமங்கள் அகற்றப் பட்டுள்ளன எனக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

ஹெல பொதுசவிய என்னும் அமைப்பால் இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஹெல பொதுசவிய அமைப்பின் தலைவர் புதுகல ஜினவன்ச தேரர், இந்த விடயம் குறித்து உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வவுனியாவில் சிங்கள கிராம சேவைப் பிரிவுகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பெரியளவில் சிங்கள மக்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நந்திமித்ரகம, செலலஹினிகம, நாமல்கம, போகஸ்வெவ 1, போகஸ்வெவ 2, மெஹவெரதென்ன ஆகிய கிராமங்கள் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்டிருந்த கிராம சேவகர் பிரிவுகளாகும்.

எனினும், 2015 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற கட்டளைச் சட்டத்தில் இந்தக் கிராம சேவகர் பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

இது, குறித்த கிராமங்களில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களுக்குப் பெரும் அநீதியாகும். அந்தப் பகுதியில் பதவியில் இருக்கும் அரச உயர் அதிகாரிகள் தமிழர்கள் என்பதனால் சிங்கள கிராமங்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது சிங்கள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்கவோ தேர்தலில் போட்டியிடவோ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

வாக்குரிமை மட்டுமன்றி அந்தப் பகுதிகளில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவிகளும் நிவாரணங்களும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## பாராட்டும் விதமாக பிள்ளைகளின் பிறந்தநாளை கொண்டாடினார் கல்வி அமைச்சர் காரியவசம்!





கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தனது மகனுக்கு பிறந்தநாள் கொண்டாடிய விதம் குறித்துப் பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

அமைச்சரின் மகள் மற்றும் மகனின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

சமகால அரசின் முக்கிய அமைச்சு பொறுப்பை வகிக்கும் அகிலவிராஜ் காரியவசம், ஆடம்பரமின்றி மிகவும் எளிமையான முறையில் பிறந்தநாள் கொண்டாடியுள்ளார்.

தனது மகன் மற்றும் மகளின் பிறந்த நாளுக்காக வித்தியாசமான முறை ஒன்றை அமைச்சர் ஏற்பாடு செய்திருந்தார். இலங்கையிலுள்ள சிறுவர் காப்பகங்கள் சிலவற்றிற்கு சென்று சிறுவர்களுக்குப் பரிசுப்பொருள்கள் மற்றும் பாடசாலை உபகர ணங்களை அமைச்சர் வழங்கினார்.

பொதுவாகப் பிரபல அமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் நட்சத்திர ஹோட்டல்களில் ஆடம்பரமாக பிறந்தநாள் கொண்டாட்டங்களை நடத்துவர்.

எனினும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் செயற்பாடு பலருக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது எனவும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விசேட பாதுகாப்பு!

கொழும்பு, செப். 07

பிணை முறி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக் குழு அமைந்துள்ள வளாகத்திற்கு நேற்று முன்தினம் முதல் வழமைக்கு மாற்றமாக விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பணியில் இருந்த பாதுகாப்பு உறுப்பினர்களை விட அதிக பாதுகாப்புப் படையினர் மற்றும் விசேட பாதுகாப்பு தரப்பினர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிணை முறி மோசடி தொடர்பிலான பிரதான சாட்சிகள் அந்த ஆணைக்குழுவில் காணப்படுகின்றமையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

(க)

# கோட்டைக்கு இராணுவத்தை அனுப்புவதுதான் மக்களின் காணிகளை விடுவிக்க ஒரேவழியாம்!

## இப்படி ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்துள்ளாராம் ஆளுநர்



யாழ்ப்பாணத்தில் பொது மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை யாழ்ப்பாணக் கோட்டைக்கு மாற்றுவது சரியான தேர்வாக அமையும் என்றும் அப்பொழுதுதான் பொதுமக்களின் காணிகளை விடுவிக்க முடியும்என்றும்வடக்குமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள விகாராதிபதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். யாழ்ப்பாணத் திலுள்ள சிங்கள மகா வித்தியாலயம் தற்போது இராணுவ முகாமாக உள்ளது. அதனை விடுவித்து மீண்டும் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துக் கொடுக்குமாறு நான் ஜனாதிபதியிடம் கூறியுள்ளேன். அதற்கேற்ற இடமாக யாழ்ப்பாணக்கோட்டை உள்ளது. இந்த கோட்டையில் 45 ஏக்கர் காணி இருக்கின்றது.

"யாழ்ப்பாண நகரத்திற்கு மத்தியில் உள்ளமையினால் அதனை கோட்டை என்று கூறுகின்றார்கள். அங்கே டச்சு நாட்டவர்களும் ஆங்கிலேயர்களும் இருந்தனர், அதேபோல எங்கள் இராணுவத்தினரும் அங்கு இருந்தனர். ஆனாலும் தற்போது இராணுவத்தினர் அந்தக் கோட்டையில் இருந்து வெளியேறியமையினால் கோட்டை வெறுமையாக தான் உள்ளது.

"சில இடங்களில் பொது மக்களின் காணிகளில் இராணுவத்தினர் உள்ளனர். அவர்களை மீண்டும் அதே கோட்டை நோக்கி நகர்த்தினால் தமிழ் மக்களின் காணிகளை இலகுவாக விடுவிக்க முடியும். அதன்படி எமது சட்டரீதியான உரிமையைப் பயன்படுத்தி இராணுவத்தினர் அங்கு செல்வதுதான் நியாயமாகும். இத்தகைய யோசனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# முரசறைந்து வெளியேற்றப்பட்ட மூதாட்டி மீண்டும் சொந்த வீட்டில் குடியேற்றப்பட்டார்

## மனிதநேயச் செயற்பாட்டாளர்களின் நிதியுதவியில் வீடு மீட்கப்பட்டது



காரைநகரில் நீதிமன்ற உத்தரவின்பேரில் முரசறைந்து வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட மூதாட்டியின் வீடு நேற்று மீண்டும் அவருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. காரைநகரைச் சேர்ந்த மனிதநேயக் கொடையாளர்களின் நிதி உதவியுடன் அந்த பெண்மணி நேற்று மாலை மீண்டும் தனது சொந்தவீட்டில் குடியேறினார்.

காரைநகர் வெடியரசன் வீதியைச் சேர்ந்த ஏரம்பு ஞானேஸ்வரி என்ற பெண்மணி பணத் தேவையின் பொருட்டு தனது வீட்டை அவ்வூரைச் சேர்ந்த ஒருவரிடம் இருவருடதவணை அடிப்படையில் அறுதி உறுதி எழுதி ஈடு வைத்தார். சுமார் மூன்று லட்சம் ரூபாவிற்கு ஈடு வைக்கப்பட்டது.

உரிய காலத்தில் அந்த வீட்டை மீட்க முடியாத காரணத்தால் ஈடு பிடித்தவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில்வழக்குத்தொடர்ந்தனர். நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையினல் அந்த வீடு ஈடு பிடித்தவர்களுக்குச் சொந்தமானது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமைமூதாட்டியின் வீட்டுக்குப் பொலிஸார் சகிதம் வந்த நீதிமன்றப் பணியாளர்கள் வீட்டில் இருந்த பொருள்கள் அனைத்தையும் வெளியே, வீதியில் தூக்கிவைத்துவிட்டு அந்தப் பெண்மணியையும் வீட்டைவிட்டு வெளியேற்றியிருந்தனர்.

"அவர்கள் வரும்போது பானையில் சோறு அவிந்து கொண்டிருந்தது. அந்தப் பானையை அப்படியே தூக்கிவெளியேவைத்தனர்" – என மூதாட்டி அழுதவாறு கருத்துவெளியிட்டிருந்தார்.

மூதாட்டியின் நிலை தொடர்பாக சமூக வலைத்தளங்களும் இணைய, அச்சு ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டதன் அடிப்படையில் அவருக்கு உதவுவதற்கு பல தரப்பினரும் முன்வந்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக மேஜர் இளமகள் என்ற மாவீரரைத் தந்த தாய் என்ற அடிப்படையில் அவர் மீது அனைவரின் பார்வையும் திரும்பியது.

இந்நிலையில், அவரது ஊரைச் சேர்ந்த வெளிநாட்டில் உள்ளவர்கள் சிலர் தாங்களாக முன்வந்து பணத்தைதிரட்டி அனுப்பிய தன் பயனாக ஈடு பிடித்தவர்களுக்கு 5 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா பணம் செலுத்தி அந்த வீடு மீண்டும் பெறப்பட்டு மூதாட்டியிடம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, வேம்படி காரைநகரில் உள்ள பாரதி கலைக் கல்லூரியின் புலம்பெயர் தேசத்தில் உள்ள செயற்பாட்டாளரும் சமூக ஆர்வலருமான தம்பையா கருணாநிதி (பபி – கனடா) எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக சுமார் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி சேர்க்கப்பட்டது.

மேலும், அவ்வூரைச் சேர்ந்த சிவகாமி நலன்புரி ஒன்றியத்தின் புலம்பெயர் செயற்பாட்டாளர்களின் முயற்சியால் 2 இலட்சத்து 96 ஆயிரம் ரூபா நிதி சேர்க்கப்பட்டது. இதன்மூலம் அந்தக் காணி தற்போது மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6.00 மணியளவில் சட்டத்தரணி சாருஜா சிவநேசனின் காரைநகரில் உள்ள அலுவலகத்தில் காணி மீளவும் அந்த மூதாட்டியின் பெயரில் எழுதப்பட்டது.

இதன்போது ஈடு பிடித்தவர்கள், காணி உரிமையாளரான ஞானேஸ்வரி, பாரதி கலைக் கல்லூரி மற்றும் சிவகாமி நலன்புரி ஒன்றியத்தின் பிரதிநிதிகள், அப்பிரதேச கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் நலன்விரும்பிகள் சிலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

காணி எழுதப்பட்டமையைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் மூதாட்டியை அழைத்துச் சென்று அவரிடம் வீட்டுத் திறப்பைக் கையளித்து, வீட்டில் குடியேற்றினர். இதன்போது சட்டத்தரணி சாருஜா சிவநேசனும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

தனது வீடு மீண்டும் கிடைப்பதற்கு உதவிசெய்த மனிதநேயம் மிக்க அனைவருக்கும் அந்த மூதாட்டி கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார். தனது இறப்பு வரை அவர்களைத் தாம் மறக்கமாட்டார் எனவும் அவர் கூறினார்.

வீடு மீட்பதற்கு நிதி உதவி செய்த மனிதநேயக் கொடையாளர்களின் பெயர் விவரம் விரைவில் வெளியிடப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கோட்டையில் மீண்டும் படையினரா? கடுமையாக எதிர்க்கின்றார் டக்ளஸ்

யாழ். கோட்டையில் படையினர் மீண்டும் நிலை கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படக் கூடா என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

யாழ். மாவட்டத்தில், தற்போது பொதுமக்களுக்குச் சொந்தமான காணி, நிலங்களில் நிலை கொண்டுள்ள படையினரை, தேசியப் பாதுகாப்பின் தேவை கருதி, அம்மாவட்டத்தின் சனத்தொகைக்கும், இன விகிதாரத்துக்கு ஏற்பவும் பொருளாதார ரீதியில் பெறுமதியற்றதான அரசாங்கத்துக்குரிய தரிசு நிலங்களுக்குள் நிலை கொள்ளத்தக்க ஏற்பாடுகளே முன்னெடுக்கப்பட வேண் டும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினரது இருப்புகள் அமைந்துள்ள மாவட்டங்களில், அந்தந்த மாவட்டங்களின் சனத்தொகைக்கும், இன விகிதாசாரத்துக்கும் ஏற்பவே அவை அமைந்திருக்க வேண்டும். மேற்படி படைகள்நிலைகொண்டிருக்கக்கூடிய காணி, நிலங்கள் கடற்றொழில், விவசாயச் செய்கைகள் போன்ற எமது மக்களின் வாழ்வாதாரங்களுடன் தொடர்புடைய வளங்களைக் கொண்ட பொருளாதார ரீதியில் முக்கியத்துவமான காணி, நிலங்களாக இருக்கக் கூடாது.

யாழ். கோட்டை என்பது, எமது பகுதியில் இருக்கக் கூடிய புராதன வரலாற்று அடையாளங்களுள் ஒன்றாகும். அந்த வகையில், கடந்த கால அசாதாரணச் சூழ்நிலைகளின் போது, பாரியசேதங்களுக்கு உட்பட்டிருந்த மேற்படி கோட்டையையும், அதனது சுற்றுப் புறங்களையும் மீளப் புனரமைப்புச் செய்வதற்கு கடந்த காலங்களில் நாம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு, போதியளவில் அதனை நிறைவேற்றியும் வந்துள்ளோம். மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளில் இன்னும் எஞ்சியிருக்கின்ற பணிகளை மேற்கொள்வது தொடர்பில், நாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அவதானத்துக்கும் கொண்டு வந்து, தற்போது அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய சூழலில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை கவருகின்ற ஓர் இடமாகவும் யாழ். கோட்டை விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய தொருநிலையில், அதனை மீள படைகளின் தேவைகளுக்காக வழங்குவது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது." – எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாத ஜனாதிபதி எதற்காகச் சந்திக்கிறார்?

## காணாமற் போனோரின் உறவுகள் சீற்றம்

கொழும்பு, செப். 07

ஆளுநர் அலுவலகத்தில் எம்மைச் சந்தித்த ஜனாதிபதி எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை இன்று வரை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களு டன் இடம்பெறவுள்ள சந்திப்பு எதற்காக? வெளி நாட்டு இராஜதந்திரிகளை ஏமாற்றுவதற்காகவா? –

இவ்வாறு கிளிநொச்சியில் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் இடம்பெறும் பகுதியில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அந்தச் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பினர்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் பிரதிநிதிகள் என்ற பெயரில் பிரதேச செயலகங்கள் ரீதியாக ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது குறித்தே இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கிளிநொச்சியில் போராட்டம் நடத்துவோரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்திக்க விருக்கிறார் எனத் தெரிவித்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஜனாதிபதி எதற்காக அவர்களைசந்திக்கின்றார்? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளிற்கு நட்ட ஈடு வழங்க சந்திக்கின்றாரா? வடமாகாண ஆளுனர் அலுவலகத்தில் வைத்து எம்மைச் சந்தித்த ஜனாதிபதி இன்றுவரை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் இந்தச் சந்திப்பு எதற்காக? வெளிநாட்டு ராஜதந்திரிகளை ஏமாற்றுவதற்காகவா?

"காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் என நாம் இங்கு உள்ள நிலையில், இவர்கள் அழைத்துசெல்வதுயாரை? இந்த ஊடக சந்திப்பின் மூலம் நாம் பகிரங்கமாக தெரியப்படுத்துவது யாதெனில், இந்தச் சந்திப்பில் கலந்து கொள்பவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அல்லர்; அவர்கள் அழைத்து செல்பவர்கள் எப்படியானவர்கள் என்பது எமக்கு தெரியாது" – என அவர்கள் தெரிவித்தனர்.

*(மற்றொரு செய்தி 06ஆம் பக்கத்தில்)*

# புதிய அலுவலகத்தில் மாகாணக் கல்வி அமைச்சு



நேற்று முதல் வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் அலுவலகம் புதிய முகவரியில் இயங்கவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நாள்வரையும் ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் இயங்கி வந்த கல்வி அமைச்சரின் அலுவலகம் இன்று முதல் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் செயற்படும் என வட மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரனைச் சந்திக்க விரும்பும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் வாராந்தம் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் சந்திக்க முடியுமெனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

நேற்று புதிய அலுவலகத்தில் மாகாணக் கல்வி அமைச்சு இயங்கிய போது எடுக்கப்பட்ட படம் இது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.